பக்கங்கள்:17 விலை : 30/-

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 01 ஞாயிற்றுக்கிழமை 17.07.2022 கதிர் 254

### இது ரகசியம் அல்ல!

சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்திக்கூட்டணியின் முன்னணிப்பிரமுகர் மனோ கணேசன். நேற்று முன்தினம் அவருக்கு வந்த தொலைபேசி அழைப்புகளில் ஒன்று புதிய பதில் ஜனாதிபதி ரணிலினுடையது.

பதில் ஜனாதிபதி ☞ 2

# வேட்பாளர்களைப் பொறுத்தே தமிழ்க் கூட்டமைப்பின் முடிவு!

## புளொட் சித்தார்த்தன் தெரிவிப்பு



(வவுனியாச் செய்தியாளர்: கி.வசந்தரூபன்)

வவுனியா, ஜூலை 17

ஜனாதிபதி தேர்தல் போட்டியாளர்கள் யார் என்பதை வைத்துத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு வழங்குவது என முடிவு எடுக்கும் என புளொட் அமைப்பின் தலைவரும், கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா கோவில்குளத்தில் நேற்று இடம்பெற்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 33 ஆவது வீரமக்கள் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ☞ 4

## வடக்கு — கிழக்கின் ஊழல்வாதிகளுக்கு எதிராக இன்று கிழக்கில் ஆர்ப்பாட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு – கிழக்கு ஊழல்வாதிகளுக்கு எதிராக இன்று மட்டக்களப்பில் மாபெரும் கண்டன அமைதிவழி ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் சமூகத்தை மலினப்படுத்தி ராஜப குடும்ப ஊழல்வாதிகளுக்குப் பின்னால் அடகு வைத்துப் பிழைப்பு நடத்திய பலர் வடக்கு,கிழக்கில் உள்ளனர்.

இவர்களை கேள்விக்கு உட்படுத்தி நிற்பதோடு, எமது மக்களையும், இளையதலைமுறையினரையும் ஊழல்வாதிகளுக்கு பின்னால் திசைதிருப்பி எமது சமூக தன்மானத்தை இழிவுபடுத்தி ☞ 2

## பொலிஸ் விரட்டி வந்த மணல் டிப்பர் திருவிழாக் கூட்டத்துக்குள் புகுந்தது

### மாலுசந்தி அனர்த்தத்தில் ஏழு பேர் படுகாயம்

பருத்தித்துறை பொலிஸாரால் துரத்திச் செல்லப்பட்ட சட்டவிரோத மணற்கடத்தல் டிப்பர் வீதியில் நின்றிருந்தவர்களை மோதித் தள்ளியதில்ல 7 பேர் படுகாயமடைந்துள்ளதனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இருவர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 01 மணியளவில் பருத்தித்துறை – யாழ்ப்பாணம் வீதி வழியாகத் தப்பித்துச் சென்ற டிப்பர் வாகனம், நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலுசந்தி பிள்ளையார் ஆலய சப்பறத் திருவிழாவில் கூடியிருந்தவர்கள் மீது மோதித் தள்ளியது. ☞ 2

## ஜனாதிபதி வேட்பாளர்களின் உத்தேச திட்டங்கள் என்ன?

### அறிவிக்கக் கோருகிறது சு.க.



வெற்றிடமாக உள்ள ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் நாட்டில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலான தமது வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால ☞ 2

## ‘பிக் பொஸ்’ சிம்மாசனம் யாருக்கு? இதுவரை 4 பேர் தேர்தல் களத்தில்!

- ★‘20’ ஆல் வந்த வினைக்கு ’20’ ஆம் திகதி பரிகாரம்.
- ★இலங்கை அரசியலில் ஏற்படவுள்ள திருப்புமுனை.
- ★19 வரை கூட்டமைப்பு மௌனம்; வாக்கெடுப்பில் விக்கி நடுநிலை.
- ★கடுப்பான மைத்திரி 10 வாக்குகளை பாவிக்காமல் இருக்க முடிவு.
- ★பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்த தொடர்ந்தும் முயற்சி.
- ★குதிரை பேரமும் – இரகசிய பேச்சுகளும் தீவிரம்.

☞ 2

## முதலை இழுத்துச் சென்ற சிறுவன் குளத்தின் ஆழத்தில் சடலமாக மீட்பு

தம்புள்ளை, கண்டலம பகுதியில் முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட 7 வயது சிறுவனின் சடலம் நேற்றுக் காலை குளத்தில் 20 அடிக்கு மேல் பள்ளத்தில் இருந்து கடற்படையின் நீர்மூழ்கிக் குழுவினரால் ☞ 2



★கோட்டா ஓட்டம் ★மஹிந்த பதுங்குகுழிக்குள்

★பஸில் அகதியாகத் தப்புவதற்கு அலைகின்றார்

## மொட்டுவுக்குத் தலைமை இல்லை!

### முன்னிலை சோசலிசக் கட்சியின் புபுது ஜாகொட விளக்கம்

பொதுஜன பெரமுனவுக்கு தற்போது தலைமை இல்லை. கோட்டாபய ராஜபக்ஷ நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ பதுங்குகுழிக்கு ஒளிந்துகொண்டிருக்கின்றார் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார். ☞ 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாகப் பதவியேற்றமையை ஒட்டி ரணிலுக்கு வாழ்த்துச் சொன்னார் மனோ கணேசன்.

"எங்களுக்கிடையில் இது என்ன சம்பிரதாய வாழ்த்துக்கள். அதை விடுங்கள். இருபதாம் திகதிக்குப் பின்னர் நாங்கள் என்ன செய்வது என்பது குறித்து பேசுவோம்" – என்றார் ரணில்.

இருபதாம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் குறித்து அவர் ஏதும் பிரஸ்தாபிக்கவில்லை. அந்த விடயத்தைத் தொட்டுக் கூட பார்க்கவில்லை ரணில். அந்தத் தேர்தலில் தான் வெல்வது உறுதி, அதற்குப் பின்னர் என்ன செய்வது என்பது குறித்துப் பேசுவோம் என்ற தோறணையில் ரணிலின் பேச்சு இருந்ததை கண்டு மனோ கணேசன் ஒரு தடவை ஆச்சரியப் பட்டுத்தான் போனார்.

மூன்று விடயங்களை ரணில் அன்று மனோ கணேசனிடம் கூறினார்.

"புதன் ஜனாதிபதி தேர்தல் திருவிழா நடந்து முடிந்ததும் உடன் தாமதம் இன்றி 19ஆவது திருத்தத்தை கொண்டு வந்து விடுவோம். எல்லா கட்சிகளும் சேர்ந்து தேசிய அரசு அமைக்க ஏற்பாடு செய்வோம். அதுமட்டுமல்ல, இப்போது தென்னிலங்கையில் இனவாதப்பேச்சு இல்லை. இதுதான் தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு வழிகளை நகர்த்துவதற்கும் கூட சரியான சந்தர்ப்பம். இந்த மூன்றுக்கும் உங்கள் ஒத்துழைப்பும் பங்களிப்பும் ஈடுபாடும் எனக்கு அவசியம் தேவை." என்றார் பதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

"நிச்சயமாக வழங்குவேன்!" – என்று உறுதி அளித்தார் மனோ.

அவருக்கு ரணில் கொடுத்த இந்தச் செய்தியில் வடக்கு, கிழக்குத் தமிழருக்கும் ஒரு முக்கியமான சமாச்சாரம் அடங்கி இருப்பதாக நான் நினைக்கிறேன்.

மனோ கணேசனுடன் இந்த விடயங்களைப் பேசிய ரணில், தமிழ்த் தரப்புகளுடனும் நிச்சயமாக இப்படி இதே தொனியில் பேசி இருப்பார் என்று நம்புகிறேன். விவரம் எனக்கு தெரியவரவில்லை. மலிந்தால் சந்தைக்கு – சந்திக்கு – வரும் அப்போது பார்க்கலாம்.

மனோ கணேசன் இப்போது வரை சஜித் தரப்போடுதான் நிற்கின்றார். ஆனால் அவருக்குத் தரப்பு முக்கியம் இல்லை. தமது மக்களின் நலன்தான் முக்கியம்.

20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்வு வாக்கெடுப்பு இரகசிய முறையில். யார், யாருக்கு வாக்களித்தார்கள் என்பது தெரியாது.

சஜித் அணியுடன் இப்போது வரை நிற்கும் மனோ கணேசன், இருபதாம் திகதி ரணிலுக்கு வாக்களித்து விட்டு வந்தாலும் நான் ஆச்சரியப்பட போவதில்லை. ஏனென்றால் மனோ கணேசனுக்குத் தான் அணி சேர்ந்த தரப்பு முக்கியமல்ல. தனது மக்களின் நலன்தான் முக்கியம். அதை முன்னிறுத்தி அவர் எந்த முடிவையும் எடுப்பார்.

பார்ப்போம் நடக்கப்போகின்றவற்றை.

– மின்னல் –

## வடக்கு - கிழக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கேள்விக்குள்ளாக்கியதை மிக வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ் இளையோர் மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்தக்கண்டனத்தைவெளிப்படுத்தும் விதத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09:30 மணிக்கு மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்றிலில் இந்த கண்டன அமைதிவழி ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ளது.

## ஜனாதிபதி வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

ஜனநாயக வரையறைக்குள் நடைமுறையில் இருக்கும் அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு ஒரு வேட்பாளர் முன்வந்து, தனது கொள்கை வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தெளிவான அறிக்கையை எமக்கு வழங்க வேண்டும்.

அவர் ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னர் அரசமைப்புக்கு உட்பட்டு சட்டத் திட்டங்களுக்கு அமைய சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான உறுதிமொழியை வழங்க வேண்டும்.

மக்கள் அடைந்துள்ள கஷ்டமான நிலைமையில் இருந்து அவர்களைக் காப்பாற்றி, மீட்டெடுப்பது தொடர்பாக வேலைத்திட்டங்கள் என்ன என்பதை முன்வைக்க வேண்டும்.

உணவு, மருந்து, எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் பசளை, கமத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் என அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான அவரது வேலைத் திட்டம் என்ன என்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டும்.

அப்படி தெளிவுப்படுத்தவில்லை என்றால், போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர்கள் கலந்துரையாடி மக்களுக்காக ஓரிடத்திற்கு வர முடியவில்லை என்றால், சுதந்திரகட்சி எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்காது என்பதை தெளிவாக கூற வேண்டும்.

நாங்கள் முழுமையாக வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதை நிராகரிப்போம். – எனவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

## முதலை இழுத்துச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டது.

இந்தச் சிறுவன் நேற்று முன்தினம் காலை தனது தாய், தந்தை மற்றும் 11 வயது சகோதரியுடன் நீராடச் சென்ற போது முதலையால் இழுத்துச் செல்லப்பட்டான்.

சிறுவனைக் காப்பாற்ற தந்தை பல நிமிடங்கள் முயற்சி செய்த போதிலும் முதலை சிறுவனை இழுத்துச் சென்றுள்ளது.

சிறுவனின் உடலில் முதலை கடித்த காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 'பிக் பொஸ்' ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு தாம் தயார் என இது வரை நால்வர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரே இவ்வாறு களமிறங்கவுள்ளனர்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு நாடாளுமன்றத்தில் தற்போது 50 ஆசனங்கள் உள்ளன. (அரவிந்தகுமார், டயானா கமகே, ஹரின், மனுச ஆகியோர் கட்சி – கூட்டணியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுயாதீன அணிகள் உட்பட மேலும் சில தரப்புகள் தமக்கு ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே சஜித் களமிறங்குகின்றார். டலஸ் மற்றும் அநுரவுக்கு முதல் வாக்களை வழங்கும் எம்.பிக்கள், இரண்டாவது விருப்பு வாக்கை தமக்கு வழங்குவார்கள் என சஜித் நம்புகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனம் மட்டுமே உள்ளது. இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஈ.பி.டி.பி,, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உள்ளிட்ட தரப்புகளை நம்பியே ரணில் களமிறங்குகின்றார்.

ரணிலுக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் வஜிர அபேவர்தன, நிமல் லான்சா, ஹரின் பெர்னான்டோ உள்ளிட்டவர்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, விமல், வாசு, கம்மன்பில உள்ளடங்கலான சுயாதீன அணிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேசக்கரம் நீட்டுவார்கள் எனக் கருதியே டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடுகின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு பிரிவு டலஸுக்கு ஆதரவை தெரிவித்துள்ளது. மற்றுமொரு தரப்பு ரணில் பக்கம் சாய்ந்துள்ளது. இதனால் ரணில் – டலஸுக்கு மொட்டு கட்சியின் முழு ஆதரவு கிடைக்காமல் போகும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத்தில் மூன்று ஆசனங்களே உள்ளன. எனினும், பொது இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதியை தெரிவுசெய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் அநுர களமிறங்குகின்றார்.

இதற்கிடையில் 'டலஸ் ஜனாதிபதி – சஜித் பிரதமர்' என்ற இலக்கை அடைவதற்கான முயற்சிகள் தொடர்கின்றன.

### வேட்பாளர்களை 'கை'விட்டது - 'கை'

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 14 உறுப்பினர்கள் எம்.பிக்களாக இருக்கின்றனர். இவர்களில் நால்வர் ( நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர, சாந்த பண்டார, சுரேன் ராகவன்) அரசு பக்கம் உள்ளனர்.

மக்கள் ஆணையை ஏற்று பொது இணக்கப்பாட்டுடன் சர்வக்கட்சி அரசமைக்காமல், ஜனாதிபதி பதவிக்கு பலர் போட்டியிட்டால் தமது கட்சி எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவாக வாக்களிக்காது என சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்று அறிவித்தார்.

### தமிழ் தேசியக் கட்சிகள் '19' இற்காக காத்திருப்பு

ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பது குறித்து நாடாளுமன்றத்தில் 10 ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டை இன்னும் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவில்லை.

19 ஆம் திகதி வேட்பு மனு தாக்கலின் பின்னரே இது சம்பந்தமாக கட்சியின் நாடாளுமன்றக்குழு கூடி முடிவெடுக்கும் என கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பின்போது தாம் நடுநிலை வகிக்கபோகிறார் எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் நேற்று அறிவித்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுதியான நிலைப்பாடு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அத்துடன், மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணிலை, ஜனாதிபதியாக்க கூடாது என போராட்டக்காரர்கள் இன்று திட்டவட்டமாக இடித்துரைத்தனர்.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. 1993 இல் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொல்லப்பட்ட பின்னர், பதில் ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க செயற்பட்டார். ஜனாதிபதி பதவிக்கு அவர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்தார். இதனால் அவர் வாக்கெடுப்பின்றி தெரிவு செய்யப்பட்டார்.

அதன்பிறகு இம்முறையே ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. ஒன்றுக்கு மேற்பட்டோர் போட்டி யிடவுள்ளனர் என அறிவித்துள்ளனர். அந்த வகையில் நாடாளுமன்றத்தில் நடத்தப்படும் வாக்கெடுப்பு மூலம், ஜனாதிபதியொருவர் தெரிவாகும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்படுவதற்கு '20' ஆவது திருத்தச்சட்டமூலமும் ஓர் காரணம். 20 ஆம் திகதியே புதிய ஜனாதிபதியும் நியமிக்கப்படவுள்ளார்.

## மொட்டுவுக்குத் தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை இலங்கையில் இருந்து எப்படி தப்பிக்க முடியும் என்று பசில் ராஜபக்ஷ விமான நிலையங்களை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றார். படகில் ஏறி அகதியாக இந்தியாவுக்கு செல்லவும் வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவினால், பொதுஜன பெரமுனவுக்கு தலைமை தாங்க முடியும் என எவராவது நினைத்துக் கொண்டிருந்தால், அது பைத்தியகாரத்தனம். ஏனென்றால் பொதுஜன பெரமுனவின் வேலைத்திட்டங்கள் தற்போது முடிந்து விட்டன.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்தவற்றை நாம் பார்த்தோம். இப்படியே சென்றால், இதனை விட மோசமான நிலைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற் படும். ரணிலால் நாடு சிவில் யுத்தத்தை நோக்கித் தள்ளப்படும் ஆபத்து உள்ளது.

தனி நபரின் அதிகார ஆசைக்காக முழு நாட்டையும் அழிக்க இடமளிக்க முடியாது. பொது மக்களுக்கும், போராட்டகாரர்களுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்துவது ரணிலின் திட்டம்.

பசில் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்ற போது குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் கடவுச்சீட்டில் முத்திரையிட மறுத்தனர். அவர்கள் போராட்டத்தில் இருந்தவர்கள் அலரி, அதனை ஆசிர்வதித்தவர்கள்.

விமான சேவை நிறுவனங்கள் தமது விமானத்தில் பசிலை ராஜபக்ஷவை ஏற்ற மறுத்தன. இந்த விமானப் பணிப்பெண்கள் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அல்லர். போராட்டத்திற்கு பொதுவாக மிகப் பெரிய ஆசீர்வாதம் இருந்தது.

மேலும் நாடாளுமன்றத்திற்கு அருகில் நடந்த சம்பவம் எப்படி ஏற்பட்டது என்பது குறித்து கட்சி என்ற வகையில் நாங்கள் விசாரணை நடத்துவோம். இரும்புக் கம்பிகளால் இராணுவத்தினரை தாக்கும் தீர்மானம் எப்படி எடுக்கப்பட்டது?

நாடாளுமன்றத்திற்கு அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்தை தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்தது. அதற்கு வெளியில் இருந்து சம்பந்தப்பட்ட அமைப்பு எது? யார் துப்பாக்கிகளை பறித்தவர்கள்? பறித்த துப்பாக்கிகள் என்னவாயின? இதனை யார் செய்தார்கள்? என்பவற்றை நாங்கள் வெளியிடுவோம்.

அரசியல் ஆதரவுள்ள ஒரு நபருக்குச் சொந்தமான பிரசார நிறுவனம் போராட்டகாரர்கள் இராணுவத்தைத் தாக்கினர் என்று தற்போது சமூக ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளது.

இவற்றில் உள்ள தொடர்புகளை நாங்கள் விரைவில் அம்பலப்படுத்துவோம். இவை அனைத்தும் ரணில் விக்கிரமசிங்கவின் விளையாட்டுக்கள். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கட்சி சார்பற்றவர்களுக்கும் அரசியல் கட்சிகளை சார்ந்தவர்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்துவது அவரது திட்டம்.

பொலிஸாருக்கும் போராட்டகாரர்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தும் திட்டமும் உள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் வசந்த சமரசிங்க மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவை முற்றிலும் திட்டமிட்ட சம்பவங்கள்.

அலரி மாளிகை மோதல் இவை அனைத்தும் திட்டமிட்ட சம்பவங்களா என்பதை தேடி அறிய வேண்டும். அனைத்தையும் துண்டு துண்டாக பிளவுபடுத்தி போராட்டத்தை பலவீனப்படுத்துவதே ரணிலின் உத்தி. – எனவும் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் விரட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருவிழாவை ஒட்டி இசைக் கச்சேரி இடம் பெற்றுக் கொண்டிருந்த போது, அதனை வீதியோரமான நின்று பார்த்து ரசித்துக் கொண்டருந்தவர்கள் மீதே டிப்பர் மோதித் தள்ளியது.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனம் தப்பித்துச் சென்றுள்ளதாக பருத்தித் துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மனறகடத்தல் மற்றும் விபத்து தொடர்பில் பருத்தித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

# தேசிய எரிபொருள் அட்டை அறிமுகம்!

எரிசக்தி அமைச்சால் தேசிய எரிபொருள் அட்டை நேற்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக, அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, வாராந்தம் உறுதிப்படுத்தப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு தேசிய அடையாள அட்டைக்கு ஒரு வாகனத்துக்கு எரிபொருள், வாகன அடிச்சட்ட இலக்கம் உள்ளிட்ட விவரங்கள் சரிபார்க்கப்பட்டு கியு.ஆர். குறியீடு ஒதுக்கப்படும் என கூறியுள்ளார்.

வாகன இலக்கத்தகட்டின் கடைசி இலக்கத்தின்படி வாரத்தில் 2 நாள்களுக்கு எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

PERSONAL ENGLISH CLASSES
K. Ganesh
(BA.Pera)
GCE O/L
எடுத்தவர்களுக்கான
3 மாத Spoken English
விரைவுப் பாட நெறி
077 766 8725
யாழ் நகர்



## மாங்கல்யா லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

### மணமகன் விபரம்

**பிறந்த திகதி**-24.11.1987
**மதம்**-இந்து
**ஜாதி**-....
**நட்சத்திரம்**-பூராடம்
**கி.பா**-14
**செவ்**-10ல்
**தகைமை**-QWARTRY SAVIYAR
**தொழில்**-UK,PR
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி மணமகள் ,UK OR இலங்கை

---

**பிறந்த திகதி**-13.09.1989
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-அவுட்டம் 1
**கி.பா**-18
**செவ்**-12ல்
**தகைமை**-B.SC COMPUTER
**தொழில்**-COMPANY COLOMBO
**எதிர்பார்ப்பு**- -பட்டதாரி கொழும்பு வேலை மணமகள்

---

**பிறந்த திகதி**-12.04.1981
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-பூசம்
**கி.பா**-61
**செவ்**-சூரி 7ல்
**தகைமை**-B.A
**தொழில்**-DEVELAPMENT OFFICER
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகள் தேவை

---

**பிறந்த திகதி**-28.06.1985
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-பூரட்டாதி 4
**கி.பா**-13
**செவ்**-6ல்
**தகைமை**-B.SC
**தொழில்**-IMMEGRASAN OFFICER
மணமகள்

---

**எதிர்பார்ப்பு** - அரசசேவை மணமகள்

---

**பிறந்த திகதி**-8.05.1987
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-பூரம்
**கி.பா**-34
**செவ்**-1ல்
**தகைமை**-G.C.E A/L
**தொழில்**-BRITUSH COWNSIL OFFCER
**எதிர்பார்ப்பு** - வெளிநாடு-உள்நாடு மணமகள்

**பிறந்த திகதி**-21.10.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-N ஆண்
**நட்சத்திரம்**-உத்தரட்டாதி
**கி.பா**-25
**செவ்**-சூரி 5ல்
**தகைமை**-BISNESS MANAGMENT
**தொழில்**-BANK OFFICER
**எதிர்பார்ப்பு**- பட்தாரி அரசசேவை மணமகள் தேவை

---

**பிறந்த திகதி**-11.08.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-மலையகம் தமிழ்
**நட்சத்திரம்**-உத்தராடம் 3
**கி.பா**-23
**செவ்**-4ல்
**தகைமை**-B.S.C M.SC
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- AUSTRLYA PRU.S.A PR பட்டதாரி மணமகள்

---

**பிறந்த திகதி**-14.09.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-அனுசம்
**கி.பா**-7
**செவ்**-12ல்
**தகைமை**-MICCANI-CAL TECNOLOGY
**தொழில்**-COMPANY
**எதிர்பார்ப்பு**- UK- USA PR CANADA PR மணமகள்

### மணமகள் விபரம்

**பிறந்த திகதி**-19.12.1995
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-விசாகம்
**கி.பா**-17
**செவ்**-சூரி11ல்
**தகைமை**-B.SCSOFTWARE ENG
**தொழில்**-COMPANY
**எதிர்பார்ப்பு**- UKCANADA PRமணமகன்

---

**பிறந்த திகதி**-31.08.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-N பெண்
**நட்சத்திரம்**-பரணி 4
**கி.பா**-9
**செவ்**-11ல்
**தகைமை**-B.B.A
**தொழில்**-.BANK OFFICER
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகன் தேவை

---

**பிறந்த திகதி**-17.04.1995
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-விசாகம் 3
**கி.பா**-25
**செவ்**-3ல்
**தகைமை**-B.SC SOFTWARE ENG
**தொழில்**-COMPANY COLOMBO
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி மணமகன் அரசசேவை -வெளிநாடு மணமகன்

---

**பிறந்த திகதி**-24.06.1997
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-திருகோணம்
**கி.பா**-53
**செவ்**-2ல்
**தகைமை**-B.B.M.S
**தொழில்**- .COMPANY
**எதிர்பார்ப்பு**- UK. CANADA பட்டதாரி மணமகன் 1992 பின்பு

---

**பிறந்த திகதி**-24.08.2002
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-பரணி
**கி.பா**-55
**செவ்**-சூரி1ல்
**தகைமை**-G.C.E A/L BIO
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு PR மணமகன் தேவை

---

**பிறந்த திகதி**-25.02.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அனுசம் 1
**கி.பா**-25
**செவ்**-2ல்
**தகைமை**-B.SC
**தொழில்**- ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG BANK MAV\NAGER மணமகன்

---

**பிறந்த திகதி**-02.06.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-விசாகம் 1
**கி.பா**-69
**செவ்**-9ல்
**தகைமை**-B.SC CIVIL ENG
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- அரசசேவை வெளிநாடு மணமகன் தேவை

---

**பிறந்த திகதி**-10.10.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மிருகசீரிடம் 4
**கி.பா**-27
**செவ்**-8ல்
**தகைமை**-B.A
**தொழில்**- அரச உயர் பதவி
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விபரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
075 330 5500, 070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர் - வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால் - நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை - மூதூர் - கொழும்பு
POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



சசிகா லேணர்ஸ்
Reg.No:DS882
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
கிளை நிறுவனங்கள் :-
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361



| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P:021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P:021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காலி முகத்திடல் வலிமை

'கோட்டா கோ கம' போராளிகளின் கோரிக்கையாக ஆரம்பத்தில் எழுந்தது ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் முழுமையாக வெளியேற வேண்டும் என்பதுதான்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தவிர்ந்த ஏனைய ராஜபக்ஷக்கள் அமைச்சுப் பதவிகளில் இருந்து முதலில் இறங்கினர். மஹிந்த, பஸில், சமல், நாமல், ஷஷிந்திர என்று எல்லா ராஜபக்ஷக்களும் தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்தனர். ஆனால் நாடாளுமன்ற உறுப் பினர் பதவிகளைத் துறக்கவில்லை. பஸில் ராஜபக்ஷ மட்டும் தன் சொந்த முடிவில் எம்.பி. பதவியையும் துறந்தார்.

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தொடர்ந்து கோட்டாபயவை பதவி துறக்கச் செய்யும் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

அமைச்சரவை பதவி துறப்பை அடுத்து, நாடாளுமன்றத்தில் தமது கட்சியின் ஒரே எம்.பியான ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். அவர் ஜனாதிபதி கோட்டாபயவின் தெரிவு என்பதால் அவரையும் வீட்டுக்குப் போகுமாறு காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் வற்புறுத்தனர். ஒற்றைக் காலில் நின்றனர்.

கோட்டாபய ஓடித் தப்பிவிட்டார். ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஓடி விடவில்லை. நாடாளுமன்றப் பின்புலப் பலத்தைத் தந்திரமாகத் திரட்டி வைத்துக் கொண்டு பலமாகக் காலூன்றி நிற்கின்றார்.

கோட்டாபய நாட்டை விட்டு ஓடிய பின்புலத்தில் பதற்றப்படாமல் தன்னுடைய பிடியை ஸ்திரப்படுத்தியிருக்கின்றார்.

அவர் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, அவரின் பிரதமர் அலுவலகத்துக்குள் புகுந்து அதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்ற முடிந்தது. ஆனால் அடுத்த ஓரிரு நாள்களில் நிலைமையை உறுதியாக சரி செய்திருக்கின்றார் ரணில். ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்தில் இருந்து மட்டுமல்ல, அலரிமாளிகை மற்றும் ஜனாதிபதி மாளிகையிலிருந்தும் வெளியேறி விட் டனர். இப்போது பழையபடி காலிமுகத்திடலில் தமது வழமையான போராட்டக்களத்துக்குள் அவர்கள் முடக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றக் கட்டத்தை நோக்கிய அவர்களின் நகர்வு முயற்சியும் முடக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறையினரை தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள்ளும் கட்டளை அதிகாரத்துக்குள்ளும் கொண்டு வந்துள்ள பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தைச் சூழ இரும்புச் சட்டகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தியிருக்கின்றார்கள்.

கோட்டாவைத் தொடர்ந்து ரணிலும் பதவி விலக வேண்டும் என்ற 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்களின் குரல் இப்போது வலுவிழந்து ஒலிப்பது உண்மை. அந்தக் கோரிக்கையை முன்வைத்து இனிமேலும் அவர்கள் பெரிய அரசியல் அதிர்வு நகர்வுகளை முன்னெடுக்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

20ஆம் திகதி தற்போதைய நாடாளுமன்றம் ரணிலையே ஜனாதிபதியாகத் தெரிவு செய்தால், அதனை ஏற்று, சகித்து, போக வேண்டிய கட்டாயத்தில்தான் காலி முகத்திடல் போராட்டக்கார்களும் இருக்கின்றார்கள். ரணிலுக்கு இது சாத்தியமானது எங்ஙனம்?

அவர் உண்மை நிலைவரங்களை – களச் சூழலை – புரிந்து கொண்டமைதான்.

காலிமுகத்திடல் போராட்டக்கார்களுக்கு மக்கள் ஆதரவு என்பது வெறுமனே ராஜபக்ஷ குடும்ப எதேச்சாதிகாரத்துக்கு எதிரானது மட்டுமே தவிர, அந்தப் போராட்டத்தை நடத்தும் போராட்ட சக்திகளின் கொள்கைக் கோட்பாடுகளை அங்கீகரிக்கும் ஆதரவு அல்ல என்பதை ரணில் புரிந்து கொண்டமைதான்.

அந்தப் போராட்ட சக்திகளும், அவற்றை ஆதரித்து, அதன் பின்புலத்தில் தமது அரசியலை நடத்த முற்பட்ட அரசியல் கட்சிகளும் இந்த கள யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டமைதான் அத்தரப்புகளின் கணக்குகள் பிழைத்தமைக்குக் காரணம்.

# கட்சி அரசியலைப் புறந்தள்ளி நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சகலரும் செயற்படவேண்டும்

## அஸ்கிரிய பீடம் கோரிக்கை

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும் சகல அரசியல்வாதிகளும் தமது கட்சி அரசியலைப் புறந்தள்ளி நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலை சபாநாயகர் மஹிந்தயாபா அபேவர்தன வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாக அறிவித்ததையடுத்து வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பிலேயே மெதகம தம்மானந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மகா சங்கத்தினர் வழங்கிய ஆலோசனைகளைக் கவனத்தில் கொள்ளாமையே அரசியல் நெருக்கடிகள் தீவிரமடைய பிரதான காரணமாகும். எனவே தற்போதுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தமது கட்சி அரசியலைப் புறந்தள்ளி நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அதற்கமைய நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும் சட்ட ரீதியானதும், அரசமைப்பு ரீதியானதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு சகல மகாசங்கத்தினர் சார்பிலும் அரசியல்வாதிகளைக் கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.

# உயர்வான ஜனநாயகத் தராதரங்களை அனைத்து எம்.பிக்களும் பேணவேண்டும்!

## மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள்

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் உயர்வான ஜனநாயகத் தராதரங்களைப் பேணவேண்டும் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் உயர்வான ஜனநாயக தராதரங்களை பேணவேண்டும். இதன் காரணமாக இலங்கை தொடர்ந்தும் பிரதிநிதித்துவ ஜனநாயக நாடாக விளங்க முடியும் என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் அடிப்படையில் அதிகார மாற்றம் அமைதியான முறையில் இடம்பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ள மனித உரிமை ஆணைக்குழு, நாடு பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளும் என எதிர்பார்ப்பதாகவும் இதுவரை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட அனைவரும் அரசமைப்பு நடைமுறையின் எல்லைக்குள் செயற்படவேண்டும். சட்ட மொழுங்கைப் பேணவேண்டும். பொது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

## வேட்பாளர்களைப்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எங்களுடைய மக்களை பொறுத்தமட்டில் இந்த பொருளாதார கஷ்டம் என்பது புது விடயமல்ல. இது ஏற்கனவே எமது மக்கள் அனுபவித்த விடயம். எங்களுடைய மக்கள் நீண்ட காலமாக பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள். இன்று நாடானது பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. பாரிய அரசியல் பிரச்சினையும் உருவாகியுள்ளது. அடுத்த கட்டமாக என்ன நடக்குமோ என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியமை மற்றும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியமை என்பவற்றை போராட்டங்கள் மூலமாக இந்த போராட்டகாரர்கள் செய்து காட்டியுள்ளார்கள்.

சுதந்திரம் அடைந்தமை தொடக்கம் இந்த நாட்டை ஆண்டு வந்த அரசாங்கங்கள் எல்லாமே பொருளாதார வளர்ச்சியிலோ அல்லது அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதிலோ அக்கறை கொள்ளாது தேசிய சிறுபான்மை இனங்களை அடக்குவதிலேயே தங்களது முழுமையான கவனத்தை செலுத்தி வந்தன.

அதேபோன்று பல குடியேற்ற திட்டங்கள் மற்றும் பாரம்பரிய இந்து ஆலயங்களிலே பௌத்த சின்னங்கள் இருப்பதாக கூறி பௌத்த மயமாக்கப்பட்டமை என்பவற்றிலேயே தங்களது நேரத்தையும் நிதியையும் செலவிட்டு வருகின்றன. அதே போன்று இந்த நாட்டிலே ஏற்பட்ட நீண்ட கால யுத்தமானது நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக அழிக்கின்ற விடயமாகவே இருந்துள்ளது. அந்த யுத்தத்தினால் நேரடியான செலவுகள் மட்டுமன்றி மறைமுக செலவுகளும் ஏற்பட்டன. பல மக்கள் கொல்லப்பட்டனர். இப்படி பல நெருக்கடிகள் ஏற்பட்டன.

மேலும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு துளியேனும் சிந்திக்காது தொடர்ந்தும் ஆக்கிரமிப்பிலேயே ஈடுபட்டு வருகின்றனர். இன்று கூட யார் இந்த அதிகாரத்திற்கு வருவது என்ற போட்டியிடுகின்றனரே தவிர, இந்த நாட்டை மீண்டும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை எவருக்கும் இல்லை. இந்த நாட்டின் மீது தமிழ்ப் பிரதிநிதிகள் காட்டுகின்ற அக்கறை கூட தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் இல்லை.

எங்களுக்கு எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும் தமிழ் அரசியல்வாதிகளான நாங்கள் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் சேர்ந்து செயற்பட வேண்டும் என்று எப்பொழுதும் கூறி வருகின்றோம். ஆனால் அவர்கள் ஜனாதிபதி பதவிக்கும், பிரதமர் பதவிக்காகவுமே போட்டியிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு என்ன செய்ய இருக்கின்றது என பலரும் கேள்வியெழுப்புகின்றனர். போட்டியாளர்கள் யார் என்பதை பார்த்த பின்பே தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு தீர்மானத்திற்கு வரும். அது என்ன தீர்மானம் என்பதை தற்போது சொல்ல முடியாது. சிலர் வாக்களிப்பை தவிர்க்கலாம் என்கின்றனர். சிலர் ஒரு பகுதியினருக்கு வாக்களிக்கலாம் என்கின்றனர். இவற்றை ஆராய்ந்து தமிழ் மக்களுக்கு எது சரியாக இருக்குமோ அதனையே செய்வோம். சிலர் நிபந்தனை வைத்து ஆதரவு வழங்குமாறு கூறுகிறார்கள். தமிழ் மக்களது அடிப்படை பிரச்சினைகளைத் தீருங்கள் என நாம் கேட்கக் கூடிய நிலமை அங்கு இல்லை. அதை செய்யக் கூடிய நிலைமை தற்போது இல்லை.

ஆனாலும், சிறையிலே இருக்க கூடிய அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற விடயங்களை அவர்களிடம் முன்வைப்போம். அதை கூட அவர்களால் செய்ய முடியுமோ தெரியாது. இவற்றை எல்லாம் யார், எந்த வேட்பாளர் எங்களுக்கு சாதகமாக செயற்படுவார் என்பதை ஆராய்ந்து பார்த்த பின்புதான் எமது ஆதரவை வழங்க முடியும். இதற்காக ஜனாதிபதி வேட்பாளர் அறிவித்த பின்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகக் கூடிச் சரியான முடிவை எடுப்போம்.

தென்னிலங்கை மட்டுமன்றி எமது மக்களும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வர வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். அதற்காக நாம் எமது அபிலாஷைகளை விட்டுக் கொடுக்க முடியாது. அதனை அடைவதற்கான சாத்வீக முறைகளை தொடர்ந்தும் முன்னெடுப்போம். – எனத் தெரிவித்தார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் புதியவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்ற முறைமை!

## எச்.ஈ. ஜனகாந்த சில்வா விளக்கம்

1981 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் முறை தொடர்பில் அரசமைப்பு எவ்வாறு கூறுகின்றது.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தின் பணிப்பாளர் (சட்டவாக்க சேவைகள்) தொடர்பாடல் (பதில்) எச்.ஈ.ஜனகாந்த சில்வா தெளிவுபடுத்துகையில் –

அரசமைப்பின் 38 ஆவது சரத்தின் (1) உப சரத்துக்கு அமைய ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அரசமைப்பின் 40 ஆவது சரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமைக்கு அமைய பதவியை வறிதாக்கிச் செல்லும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறாது. எஞ்சியுள்ள காலத்துக்கு மாத்திரம் அந்தப் பதவியை வகிப்பதற்கு நாடாளுமன்றத்தால் அதிலுள்ள உறுப்பினர்களில் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதியுள்ள ஒருவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இதன்போது இந்தத் தெரிவு 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைப் பின்பற்றியதாக அமைந்திருக்கும்.

விசேடமாக இந்த நடைமுறை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், வாக்கெடுப்பின் போது சபாநாயகரும் வாக்களிப்பார். அத்துடன் இந்த நடைமுறைகளுக்காக நாடாளுமன்றம் மூன்று நாள்கள் கூடும்.

அதன்படி, சட்ட விதிகளுக்கு உட்பட்டதாக இந்தத் தேர்தலை நடத்துவதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இதில் ஜனாதிபதிப் பதவி வெற்றிடமான திகதிக்குப் பின்னர் இயன்றளவு விரைவாகவும், எச்சந்தர்ப்பத்திலும் அந்தத் திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பிந்தாமலும் இந்தத் தெரிவு நடத்தப்படுதல் வேண்டும்.
- இதற்கமைய இந்த வெற்றிடம் ஏற்பட்டு மூன்று நாள்களுக்குள்ளாக நாடாளுமன்றத்தைக் கூடுமாறு அழைப்பதாகச் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அத்தகைய கூட்டத்துக்கு என நிர்ணயிக்கப்படும் திகதியையும், நேரத்தையும் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும்.
- அவ்வாறு நாடாளுமன்றம் கூடும் போது ஜனாதிபதிப் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளது எனச் செயலாளர் நாயகம் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். இதற்கமைய நியமனங்கள் அவரால் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான திகதியையும் நேரத்தையும் அவர் நிர்ணயிப்பதுடன், கூட்டத் திகதியிலிருந்து 48 மணித்தியாலங்களுக்கு முந்தாததும், ஏழு நாள்களுக்குப் பிந்தாததுமான ஒரு திகதியாக அது இருக்க வேண்டும்.
- நியமனங்கள் பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று நாடாளுமன்றம் கூடவேண்டும் என்பதுடன், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராகவும் செயலாற்றுவார். ஜனாதிபதிப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கென எவரேனும் உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்பும் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் எந்த உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்புகிறாரோ, அந்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஜனாதிபதி பதவியில் அவர் சேவை செய்ய விருப்புடையவராகவுள்ளார் எனக் கூறும் எழுத்திலான சம்மதத்தை அத்தகைய உறுப்பினரிடமிருந்து முன்னர் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு சம்மதத்தைத் தெரிவித்த உறுப்பினர்கள் அன்றையதினம் நாடாளுமன்றததுக்கு சமுகமளித்திருக்க வேண்டும்.
- இங்கு ஜனாதிபதிப் பதவிக்கு உறுப்பினர் ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருந்தால் அவர் அந்தகைய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென செயலாளர் நாயகம் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு இருப்பின் வாக்கெடுப்பை நடத்துவதற்கான திகதியும், நேரமும் நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டும்,

அத்தகைய திகதி நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாத ஒரு திகதியாக இருக்க வேண்டும்.

- வாக்கெடுப்பை நடத்துவதற்கென நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று செயலாளர் நாயகமே தெரிவத்தாட்சி அலுவலராகச் செயற்படுவதுடன், வாக்களிப்புத் தொடங்குவதற்கு முன்னர் வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டியை உறுப்பினர்களுக்குக் காண்பித்து அவர்கள் முன்னிலையில் இலச்சினையிடல் வேண்டும். இதற்கமைய வாக்களிப்புத் தொடங்கியவுடன் தெரிவத்தாட்சி அலுவலராகப் பணியாற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சபாநாயகர் உள்ளிட்ட ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயரையும் அழைத்தல் வேண்டும். அவ்வாறு அழைக்கப்படும் போது உறுப்பினர்கள் தெரிவத்தாட்சி அலுவலரின் மேசைக்குச் சென்று வாக்குச்சீட்டொன்றைப் பெற்று தமது வாக்குகளை அடையாளமிட வேண்டும். அதன் பின்னர் தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.
- உறுப்பினர் ஒருவர் வாக்குச்சீட்டொன்றைத் தற்செயலாகப் பழுதாக்கினால், அதனை அவர் தெரிவத்தாட்சி அலுவலரிடம் திருப்பிக் கொடுத்து, தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தற்செயல் பற்றித் திருப்தியுற்றால் அவருக்கு வேறொரு வாக்குச்சீட்டைக் கொடுக்கலாம். பழுதாக்கப்பட்ட வாக்குச்சீட்டு தெரிவத்தாட்சி அலுவலரால் உடனடியாக இல்லாதாக்கப்படும். பெயர் கூப்பிடப்பட்டபோது வாக்களிக்காதிருந்த எவரேனும் உறுப்பினரின் பெயரை இரண்டாவது முறையாக அழைத்தல் வேண்டும். அவ்வாறு அழைக்கப்பட்ட பின்னரும் வாக்களிக்காதிருந்தால் அவர் வாக்களிக்காது ஒதுங்கியிருந்தவராகக் கருதப்படுவார்.
- ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உரித்துடையதாக இருக்கும் என்பதுடன், எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கு எதிரேயுள்ள சதுரத்தில் '1' எனும் எண்ணை இடுதல் வேண்டும். பல வேட்பாளர்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் விருப்பத் தெரிவுகளை வழங்க முடியும். இதற்கமைய போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய பெயர்களுக்கு எதிரேயுள்ள சதுரங்களில் 2,3,எனும் விருப்பத் தெரிவுகளை வழங்க முடியும்.
- இவ்வாறு வாக்களிப்பு இடம்பெற்ற பின்னர் வாக்கு எண்ணும் பணி முன்னெடுக்கப்படும். எவரேனும் வேட்பாளர் வாக்குகள் எண்ணப்படும் இடத்தில் சமுகமளிக்க விரும்பினால் அதற்கு வாய்ப்புக் கிடைக்கும் அல்லது அவரது பிரதிநிதியாகச் சமுகமளிப்பதற்கு வேறொரு உறுப்பினரை நியமிக்கவும் முடியும்.
- அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளுள் அரைவாசிக்குக் கூடுதலான வாக்குகளை ஒரு வேட்பாளர் பெற்றுள்ளவிடத்து தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை உடனடியாக அறிவிக்க வேண்டும்.
- அதேநேரம், வேட்பாளர் எவரும் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளுள் அரைவாசிக்கும் கூடுதலான வாக்குகளைப் பெறாதவிடத்து இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தெரிவுகள் சரிபார்க்கப்படும். இதில் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கப்பட்டு அவருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது விருப்பத் தெரிவு எண்ணப்படும்.
- வாக்கு எண்ணுகையின் முடிவில் வேட்பாளர் எவருமே செல்லுபடியான வாக்குகளுள் அரைவாசிக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றில்லாதவிடத்து அந்த எண்ணுகையின் போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ள வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை தெரிவத்தாட்சி அலுவலர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.
- அத்துடன், இரு வேட்பாளர்கள் அல்லது பலருக்கிடையிலான வாக்குகள் சரிசமமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் திருவுளச்சீட்டு போடப்படும்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் சர்வதேச சமூகத்துக்கு முன்வைத்துள்ள கோரிக்கை!

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் இணைப்பாளர்கள் சர்வதேச சமூகத்துக்குப் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இந்த கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

அந்த கோரிக்கைகளாவன –

மக்கள் போராட்டத்துக்குப் பயந்து இன அழிப்பு மற்றும் போர்க்குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவுக்குத் தப்பியோடியுள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் 1971 நாள்களுக்கு மேலாக எங்கள் உறவுகளைத் தேடி போராடி வருகின்றோம் . எங்களுடன் இணைந்து போராட்டம் நடத்திய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோரில் இதுவரை 138 பேர் மரணமடைந்திருக்கின்றனர்.

எங்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் கைகளின் மூலமே படையினரிடம் ஒப்படைத்திருந்தனர்.அவர்களின் கதி என்ன என்பது தொடர்பாக இதுவரை எங்களுக்குப் பதிலளிக்கப்படவில்லை.

எங்களுடைய உறவுகள் தொடர்பாக சர்வதேச சமூகம் சிபார்சு செய்த நிலைமாறுகால நீதி ஏற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. நிலைமாறுகால நீதி ஏற்பாடுகள் உண்மையைக் கண்டறிதல், நீதி வழங்குதல், இழப்பீடு வழங்குதல், மீளநிகழாமையை உறுதிப்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. கண்துடைப்புக்கு காணாமல் போனோர் அலுவலகம் இழப்பீட்டு அலுவலகம் என்பன உருவாக்கப்பட்டன.

இந்த அலுவலகங்களின் செயற்பாடுகளில் நம்பிக்கை அற்றிருந்ததால் நாம் அவற்றை முழுமையாக நிராகரித்து சர்வதேச விசாரணையைக் கோரியிருந்தோம். இந்தக் கோரிக்கையை முன்வைத்து பல நாள்களாகப் போராடிவருகின்றோம்.

தற்போது இந்தக் கொலையாளிகள் சிங்கள எதிர்ப்புக் காரணமாக நாட்டைவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

எனவே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளாகிய நாம் சர்வதேச நாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நோக்கி பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓர் இன அழிப்பு படுகொலையாளி, போர்க்குற்றவாளி என்பதைப் பிரகடனப்படுத்துங்கள். ஜனாதிபதி கோட்டாபயவிற்கு எந்த ஒரு நாடும் அடைக்கலம் கொடுக்கக் கூடாது. தங்கள் நாட்டுக்கு அவர் வருகைதரின் அவரைக் கைதுசெய்து குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துங்கள்.

ஜனாதிபதி கோட்டபயவிற்கும் ஏனைய ராஜபக்ஷக்களுக்கும் சர்வதேச ரீதியாக இருக்கும் சர்வதேச சொத்துக்களை முடக்கி அவற்றைப் பாதிக்கப்பட்ட மக்கள் பெற்றுக்கொள்ள வழி செய்யுங்கள் .

ஜனாதிபதி கோட்டாபயவும், அவரது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவும் போரின்போதும், போரின் பின்னரும் வன்னியில் உள்ள தமிழ் மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்துள்ளனர். வங்கிகளில் இருந்த பணத்தையும், கொள்ளையடித்துள்ளனர். அந்தச் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து மக்கள் அதனைப் பெற்றுக்கொள்ள வழி செய்யுங்கள்.

ஐரோப்பிய நாடுகளின் நீதிமன்றங்கள் பலவற்றுக்கு மனித குலத்துக்கு எதிராக குற்றம் செய்தவர்கள் தங்கள் நாட்டுக்கு வந்தால் அவர்களைக் கைதுசெய்து விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு . எனவே, ஐரோப்பிய நாடுகளுக்கு ஜனாதிபதி கோட்டாபயவும், ஏனைய ராஜபக்ஷக்களும் வருகை தந்தால் அவர்களைக் கைது செய்து தங்கள் தங்கள் நீதிமன்றங்களில் விசாரணைக்கு உட்படுத்துங்கள். போரின் பின்னர் தமிழர் ஆக்கிரமிப்புக்கள் சிறிலங்கா தாயகத்தில் பச்சை ஆட்சியாளர்களால் அவற்றை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்.

அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு அழுத்தம் கொடுங்கள். படையினரால் பறிக்கப்பட்ட காணிகளை மக்கள் மீளப் பெறுவதற்கு வழிசெய்யுங்கள்

தேசம் , இறைமை , சுயநிர்ணயம் என்ற கொள்கைகளின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உருவாவதற்கு வழி செய்யுங்கள். அரசியல் தீர்வு வரும் வரை தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்கால நிர்வாகம் உருவாகுவதற்கு வழி செய்யுங்கள் – என்று தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# உலக அரசியல் வரலாற்றில் புதிய ஜனாதிபதித் தெரிவு முக்கிய இடம்பிடிக்கும் என்கிறார் சபாநாயகர் மஹிந்த!



புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வழிமுறைகள் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதித் தெரிவு நிறைவுபெறும் வரை ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள்,கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றை அரசமைப்பின் பிரகாரம் பிரதமர் செயற்படுத்துவார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, தென்னாசியாவில் பழைமையான ஜனநாயக நாடு எனப் பெருமை கொள்ளும் நாம், புதிய ஜனாதிபதி தெரிவை முழுமையான ஜனநாயக வரைபிற்குட்பட்டதாகவும், வினைத்திறனான முறையிலும் செயற்படுத்துவது எமது நாட்டுக்கு மாத்திரமல்ல உலக அரசியல் வரலாற்றிலும் முக்கியமானதாகக் காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாட்டு மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

சபாநாயகர் இதன் போது மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்தார்.

கடந்த வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் சட்டபூர்வமாக அவர் பதவி விலகியுள்ளார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் பதவி விலகிய முதலாவது ஜனாதிபதியாகக் கோட்டபய ராஜபக்ஷ கருதப்படுகிறார்.

புதிய ஜனாதிபதி தெரிவு இடம்பெறும் வரை ஜனாதிபதிக்கான அதிகாரங்கள், கடமைகள் ஆகியவற்றை அரசமைப்பின் பிரகாரம் பிரதமர் செயற்படுத்துவார்.

புதிய ஜனாதிபதி தெரிவு ஏழு நாள்களுக்குள் நிறைவடைய வேண்டும். அரசமைப்பு,ஜனநாயக கோட்பாடுகளுக்கமைய செயற்படுவதற்கு நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அரசமைப்பின் 38(1) உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவது தொடர்பிலான கடிதம் வியாழக்கிழமை மாலை கிடைக்கப்பெற்றது.

அதற்கமைய 2022 ஜூலை மாதம் 14ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி சட்டபூர்வமாகப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அதற்கமைய புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வழிமுறைகள் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. புதிய ஜனாதிபதி தெரிவு நிறைவு பெறும் வரை ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள்,கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றை அரசமைப்பின் பிரகாரம் பிரதமர் செயற்படுத்துவார்.

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பில் கட்சி தலைவர் கூட்டத்தில் சகல கட்சி தலைவர்களுக்கும் குறிப்பிட்டதற்கமைய,1981,02ஆம் இலக்கத்திலான ஜனாதிபதி தெரிவு விசேட விடயதான சட்டம் மற்றும் அரசமைப்பின் 40 ஆவது உறுப்புரையின் பிரகாரம் இடம்பெறும். புதிய ஜனாதிபதி தெரிவு விரைவாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

தென்னாசியாவில் பழைமையான ஜனநாயக நாடு என பெருமை கொள்ளும் நாம் புதிய ஜனாதிபதி தெரிவை முழுமையான ஜனநாயக வரைவிற்குட்பட்டதாகவும், வினைத் திறனான முறையிலும் செயற்படுத்துவது எமது நாட்டுக்கு மாத்திரமல்ல உலக அரசியல் வரலாற்றிலும் முக்கியமானதாகக் காணப்படும்.

ஆகவே, ஜனநாயக செயற்பாட்டுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறு சகல கட்சித் தலைவர்களிடமும், அரச அதிகாரிகளிடமும், பாதுகாப்புத் தரப்பினரிடமும் வலியுறுத்துகிறேன்.

குறிப்பாக நாட்டின் கௌரவமான மற்றும் அன்பான மக்களிடம் கேட்டுக்கொள்வது யாதெனில் ஜனநாயக நாடாளுமன்ற முறைமையை செயற்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல உறுப்பினர்களும் சுதந்திரமாக மற்றும் மனசாட்சிக்கு அமைவாக நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளும் அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அமைதியான சூழலில் பொறுப்பான தரப்பினரது பங்குபற்றலுடன், 7 நாள்களுக்குள் புதிய ஜனாதிபதி தெரிவை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளேன். அதற்கமைய இன்றைய தினம் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் என்றார்.

# ரணில் அரசியல் அனுபவம் மிக்கவராவார் ஜனாதிபதி பதவிக்கும் அவரே சிறந்தவர்!

## ஆளும்கட்சி திட்டவட்டம்



ஜனாதிபதி பதவிக்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஆளும்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க இதுவரை தனது வேட்புமனுவை அறிவிக்காவிட்டாலும், நாட்டின் அடுத்த ஜனாதிபதிக்கான போட்டியில் அவர் களமிறங்குவார் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

அந்தவகையில் அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி பதவிக்கு நியமித்தால், சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் இலக்கை அடைய முடியாது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் போட்டியிடவுள்ளார் என அறிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பொதுஜன பெரமுனவின் அடிப்படைக் கொள்கைக்கு இது ஒரு சவால் என சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

இருப்பினும் புதிய அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு, அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பில், பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவம், சர்வதேச உறவுகள் மற்றும் திறமைகளைக் கருத்திற்கொண்டு அவர் நாட்டை வழிநடத்துவதற்கு சரியானவர் என அவர்கள் கருதுகின்றனர் என அவர் கூறினார்.

நீண்ட கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

# இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடைக்கால அரசு உருவாக்கப்படவேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை



இணைந்த வடக்கு கிழக்கிலே இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தற்போது அமையவுள்ள சர்வகட்சி அரசாங்கத்திடம் தமிழ் அரசியல் தலைமைகள் முன்வைக்க வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

சர்வகட்சி அமையவுள்ள நிலையில், ஈழத்தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமென்ற கோரிக்கையைத் தமிழ் அரசியல் தலைமைகள் வலியுறுத்த வேண்டுமென புலம்பெயர் தமிழ் மக்கள், தாயக மக்கள் வலியுறுத்த வேண்டும்.

2012 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ரோம் ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், இணைந்த வடக்கு கிழக்கிலே இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் இடைக்கால அரசாங்கத்திடம் சமர்ப்பித்து உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென தமிழ் அரசியல் தலைமைகள் வலியுறுத்த வேண்டும்.

இல்லையெனில் மிகப்பெரிய வரலாற்று தவறு அல்லது துரோகத்தை இழைக்கின்றோம். - எனக் கூறினார்.

# வெள்ளவத்தை மயூராபதியில் இன்று சண்டிஹோம பூஜை!

வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் 35 ஆவது ஆண்டு ஆடிப்பூர மகோற்சவம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) தொடக்கம் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும். மகோற்சவத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை (17.07.2022) தொடக்கம்எதிர் வரும் 06.08.2022 சனிக்கிழமை வரை ஒவ்வொரு நாளும் சண்டி ஹோமம் இடம்பெறவுள்ளது.

துர்க்கா தேவிக்கு ‘மங்கள சண்டிகா’ என்னும் பெயரும் உண்டு.

துர்க்கையின் அருளை பெறுவதற்கு செய்யப்படும் சிறப்பான ஹோமம் ‘சண்டி ஹோமம்’ என அழைக்கப்படும்.

சண்டி ஹோமம் ஒரு பிரம்மாண்ட ஹோமம் என்பதால் பொருட் செலவு மிக்க ஹோமமாக கருதப்படுகிறது. சக்தி வாய்ந்த இந்த ஹோமத்தை பல வருடங்கள் ஹோம பூஜை செய்வதில் அனுபவம் பெற்ற அந்தணர்கள் செய்வதால் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்ல பலன்களை இது தருகின்றது.

ஹோமம் இடம்பெறும் நேரத்தில் நீங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினர் அதிகாலையில் எழுந்து குளித்து ஹோமத்தில் கலந்து கொள்ள வேண்டும். குறிப்பாக இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இந்த சண்டி ஹோமம் நல்ல சாதகமான பலன்களைக் கொடுக்கும்.

# சபாநாயகரை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று (சனிக்கிழமை) காலை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது தற்போதைய முக்கியமான தருணத்தில் ஜனநாயகம் மற்றும் அரசமைப்பு கட்டமைப்பை நிலைநிறுத்துவதில் நாடாளுமன்றத்தின் பங்கை இந்திய உயர்ஸ்தானிகர் பாராட்டினார்.

இலங்கையில் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்தும் உறுதுணையாக இருக்கும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சபாநாயகரிடம் தெரிவித்தார்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I | English for all | Sunday the 17th of July 2022


**We welcome students' articles in word for publication**
-Editor-
kalaikkathiredu@gmail.com

## READING COMPREHENSION

My father usually gets up at four o'clock in the morning. He has a cup of tea and then he starts work. He walks to work. He milks the cows. There are eighty-two cows on the farm. When he finishes he comes back home to have lunch. Then he goes around the farm on his motorbike to check the animals and the fields. In the afternoon he milks the cows again and then he comes home to have a shower and have dinner. He goes to bed at nine o'clock pm.



**01. My father gets up at...**
02:00 03:00
4:00 4:30

**02. To check the animals, my father uses...**
a bike. a horse.
a motorbike. a dog.

**03. For breakfast my father drinks...**
milk. juice.
coffee. tea.

**04. He goes to work...**
on foot. by car.
by bus. on a horse.

**05. My father has...**
72 cows. 82 cows.
82 dogs. 82 sheep.

**06. My father milks the cows...**
in the morning. in the afternoon.
in the morning and the afternoon.
never.

**07. He has dinner ...**
after his shower. before his shower.
during his shower. before breakfast

# Renewable vs. Non-Renewable Resources

*- By Lydia Lukidis -*



Energy resources are all around us. They are things that people use. They come from nature. We need them to survive. For example, they keep us warm and help us cook food. We also use them to do things that make life easier, like driving cars. These resources fall into two categories: non-renewable and renewable.

Confused? Let's take a closer look.

Non-renewable energy resources are limited. There is only a certain amount of them.

They take a long time to be replenished. For example, coal, oil, and natural gas are nonrenewable. Once we use or burn through them, they're gone forever. It takes millions of years to make more.

Renewable resources are different. They are replenished by nature fairly quickly.

They rely on Earth's natural processes. Examples include plants, solar power, wind, and water. You can imagine that it's impossible to "use up" all the sunlight from the sun. And those rays are useful when heating up a building or a swimming pool. The same goes for water. It never fully disappears. The water cycle keeps the flow going. It may evaporate.

But it still exists in gas form. Soon, condensation forms in the clouds. We're all familiar with the part that happens after that: it rains! Then the water cycle begins again.

For hundreds of years, humans have used renewable resources. They used wood for cooking and heating. They used wind and water for milling grain. Then about 150 years ago, scientists discovered the power of fossil fuel. Energy could be taken out of the fossils of ancient plants and animals. Soon, coal, oil, and natural gas replaced things like wood and wind. They were great resources, but were not unlimited.

Today, we rely on many non-renewable resources. We use them to heat our homes, play our electronic devices, and power our cars. Think about that the next time you ride a school bus. The bus uses diesel or gasoline. Both are made from petroleum. Petroleum is a fossil fuel. Or imagine the next time you play a video game, or turn on a light. So many things require energy.

runs on water or plant power? Or a house powered by solar energy instead of electricity? These resources would not pollute the environment. And they can be replenished in a short time. We need to keep doing research on these kinds of advancements.

In the meantime, it's important to use our non-renewable resources wisely. If we use

them too much or too quickly, they will run out faster. One thing we can all do is follow the

rule of the three R's: Reduce, Reuse and Recycle. Doing this will make a difference. We're

all living on this beautiful planet together, so why not take care of it?

## *Read the passage and answer the questions*

1. How long does it take for non-renewable resources to be replenished once they are used?
a. a few years b. hundreds of years
c. thousands of years d. millions of years

2. What form of energy transformed the way humans survive?
a. solar power b. fossil fuel
c. wind energy d. water energy

3. What is an advantage of using renewable resources, instead of non-renewable resources?
________________________________________
________________________________________
________________________________________

4. Match each vocabulary word from the article with the correct definition.

| | |
|---|---|
| __e__ 1. replenished | a. a form of energy fueled by charged particles |
| _____ 2. evaporate | b. a natural fuel that comes from ancient plants and animals |
| _____ 3. condensation | c. a form of energy that comes from the sun |
| _____ 4. fossil fuel | d. belonging to the distant past |
| _____ 5. pollutes | e. filled back up again; replaced |
| _____ 6. gasoline | f. contaminates the environment |
| _____ 7. electricity | g. crushing or grinding grain |
| _____ 8. solar power | h. to turn from liquid to gas |
| _____ 9. milling | i. a form of petroleum used as fuel |
| _____ 10. ancient | j. conversion of gas to liquid |

**The best way to predict future is to design it. - Buckminster Fuller.**



# DIRECT DEMOCRACY IN SWITZERLAND

Direct democracy is one of the special features of the Swiss political system. It allows the electorate to express their opinion on decisions taken by the Swiss Parliament and to propose amendments to the Federal Constitution. It is underpinned by two instruments: initiatives and referendums.

In Switzerland the people play a large part in the decision-making process at all political levels. All Swiss citizens aged 18 and over have the right to vote in elections and on specific issues. The Swiss electorate are called on approximately four times a year to vote on an average of fifteen such issues. In recent decades, voter turnout has been a little over 40% on average.

Citizens are also able to propose votes on specific issues themselves. This can be done via an initiative, an optional referendum, or a mandatory referendum. These three instruments form the core of direct democracy.

### Popular initiative

The popular initiative allows citizens to propose an amendment or addition to the Constitution. It acts to drive or relaunch political debate on a specific issue. For such an initiative to come about, the signatures of 100,000 voters who support the proposal must be collected within 18 months. The authorities sometimes respond to an initiative with a direct counter-proposal in the hope that a majority of the people and the cantons support that instead.

### Optional referendum

Federal acts and other enactments of the Federal Assembly are subject to optional referendums. These allow citizens to demand that approved bills are put to a nationwide vote. In order to bring about a national referendum, 50,000 valid signatures must be collected within 100 days of publication of the new legislation.

### Mandatory referendum

All constitutional amendments approved by Parliament are subject to a mandatory referendum, i.e. they must be put to a nationwide popular vote. The electorate are also required to approve Swiss membership of specific international organisations.




Switzerland is made up of 26 cantons, which are themselves divided into more than 2,300 communes. The Confederation, the cantons and communes share political and legislative powers.

### Parliamentary chamber: the National Council

Parliamentary chamber: the National Council © FDFA, Presence Switzerland

Although its official name is the Swiss Confederation (for historical reasons), Switzerland has, in fact, been a federal state since 1848. Power is shared between the Confederation (the central state based in the capital city of Bern), the cantons (constituent states) and the communes. All three political levels have a legislative (law-making) and an executive (government). Only the Confederation and the cantons have judicial powers (courts).

### Respect for minorities

In a country with different religious and linguistic groups, the federalism model makes it possible to accommodate both national unity and cultural diversity. Together with direct democracy, which offers the people the option of launching popular initiatives and referendums, federalism is one of the cornerstones of the Swiss political system.

To ensure that the 26 cantons are equally represented at the federal level, each canton sends two representatives to the Council of States, one of the two chambers of the Federal Assembly. The six half-cantons are an exception to this rule, and can send only one elected representative to Bern. All 26 cantons have the right to launch a popular referendum on a piece of federal legislation provided that at least eight cantons express support for it.

### Division of powers

The powers of the Confederation are limited to those areas explicitly entrusted to it by the Federal Constitution. Responsibility for all other matters, such as education, health and policing, fall to the cantons, which enjoy a high degree of policy-making autonomy in these areas. As for the communes, their responsibilities are explicitly granted by either the canton or the Confederation. However, the communes may legislate on matters that are not covered by cantonal legislation.

## The seven members of the Federal Council



The Swiss government comprises the seven members of the Federal Council. The president is elected for a one-year term of office and is regarded during that time as 'Primus inter pares', or first among equals.



# குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்







## ஐந்து தவளைகள்

ஐந்து தவளைகள் ஒன்றாக வாழ்ந்து வந்தன.அந்த தவளைகள் வாழ்ந்து வந்த இடத்தின் அருகே ஒரு சிறிய குன்று ஒன்று இருந்தது.ஆனால் அந்த தவளைகளின் கண்களுக்கு அது ஏதோ மிகப்பெரிய மலை போல் காட்சி தந்தது.

இந்த மலையை யார் கட்டியிருப்பார்கள்,இவ்வளவு உயரமாக இருக்கிறதே என்று ஒவ்வொரு நாளும் தவளைகள் பேசிக் கொள்ளுமாம்.நான்கு தவளைகளும் தங்களுடைய ஆற்றாமையை மாறி மாறி வெளிப்படுத்திக் கொண்டு இருந்தன.

ஒரு நாள் தீடீரென அங்கு ஓர் புதிய தவளை ஒன்று அந்த கூட்டத்தில் சேர்ந்தது.வந்த புதிய தவளையோ வந்த உடனேயே,எனக்கு அந்த மலையை பார்க்க பார்க்க ஆசையாக இருக்கிறது.நான் அந்த மலையை ஏற வேண்டும் என்று எண்ணம் கொள்கிறேன் என்றது.மற்ற நான்கு தவளைகளும் சிரித்தன.

உடனே புதிதாக வந்த தவளை நான் இந்த மலையை ஏறப் போகிறேன் என்று கூறியது.அதற்கு மற்ற ஐந்து தவளைகளும் ஏதோ கோமாளியை பார்த்தது போல் சிரித்தன.

முதல் தவளையோ இது நடக்காத காரியம் அந்த மலையை யாராலும் ஏற முடியாது என்றது,இரண்டாவது தவளையோ அந்த மலையை ஏற உன்னால் முடியாது என்றது,மூன்றாவது தவளையோ நீ ரொம்ப சின்னவன் அதனால் உன்னால் கண்டிப்பாக அந்த மலையை ஏற முடியாது என்றது நான்காவது தவளையோ நீ அந்த மலையை ஏறுவதற்கு முன் இறந்து விடுவாய் என்றது, ஐந்தாவது தவளையோ நீ மலை ஏறுவதாக கூறி உன் நேரத்தை வீணடிக்காதே என்று கூறியது.

எல்லா தவளைகளும் ஆளாளுக்கு ஏதோ ஒன்றை கூறிவிட்டு அவரவர் இருப்பிடத்திற்கு சென்று விட்டன. ஆனால் அந்த புதிய தவளையோ நேரே சென்று அந்த மலையேறத் தொடங்கியது.

விடியற்காலையில் எல்லா தவளைகளும் வெளியே வந்தன.வணக்கம் நண்பர்களே என்ற குரல் மலையின் உச்சியில் இருந்து கீழே கேட்டது.அனைத்து தவளைகளும் அண்ணாந்து பார்த்தேன். அந்த புதிய தவளை மலையின் உச்சியை அடைந்திருந்தது.தவளைகளுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம் எப்படி இந்த தவளை மலை உச்சியை அடைந்தது என்று...

ஆனால் அந்த புதிய தவளையின் கடின உழைப்பால் தான் அதனால் மலையேற முடிந்தது.அதே சமயம் மற்ற ஐந்து தவளைகளின் வார்த்தைகள் அதன் மூளைக்கு செல்லவே இல்லை.ஏனென்றால் அந்த தவளைக்கு காது கேட்காது. அதனால் தான் அந்த புதிய தவளையால் எந்த தடுமாற்றமும் இன்றி மலையை ஏற முடிந்தது.

# அப்துல்கலாம் பொன்மொழிகள்



உன் கைரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே. ஏனென்றால் கையே இல்லாதவனுக்கு கூட எதிர்காலம் உண்டு.

முதல் வெற்றிக்குப் பிறகு ஓய்வெடுத்து விடாதே! அடுத்தமுறை தோல்வியுற்றால், உன் முதல் வெற்றி அதிர்ஷ்டத்தால்தான் கிடைத்தது என்பார்கள்!

கனவு காணுங்கள்...கனவுதான் சிந்தனையாகவும், சிந்தனைதான் செயலாகவும் மாறுகிறது.

உன்னால் மாற்ற முடியாததை அப்படியே ஏற்றுக் கொள்ள பழகிக் கொள்.

நீ கடைசியாய் செய்த தவறு தான் இப்போது உன்னுடைய முதன்மையான ஆசான்.

உலகம் உன்னை அறிவதைவிட, உன்னை உலகிற்கு அறிமுகம் செய்துகொள்!

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார் அதை வென்று விடலாம்.

நீங்கள் சூரியனைப் போல பிரகாசிக்க வேண்டுமானால், முதலில் சூரியனைப் போல எரிய வேண்டும்.

ஒருநாள் நிச்சயம் விடியும். அது உன்னால் மட்டும் முடியும்.

நீ செல்லும் பாதைகளில் தடைகள் ஏதும் இல்லை என்றால் அது நீ செல்லும் பாதை அல்ல, யாரோ ஒருவர் சென்ற பாதை.

நீங்கள் உறங்கும்போது வருவதல்ல கனவு. உங்களை உறங்கவிடாமல் செய்வதே கனவு.

ஒருமுறை வந்தால் கனவு! இருமுறை வந்தால் ஆசை! பலமுறை வந்தால் இலட்சியம்!

மாணவர்களின் மிக முக்கியமான இலக்கணம், கேள்வி கேட்பதே.

இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளில் தான் உள்ளது.

உலகிற்கு ஏற்றாற் போல் தன்னை மாற்றிக் கொள்கின்றனர். பலர் ஆனால் தனக்கு ஏற்றாற் போல், உலகையே மாற்றிக்கொள்கின்றனர் சிலர்.

அற்ப சந்தோஷங்களுக்காக ஓடுவதைவிட உயர்ந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடுவது சாலச் சிறந்தது!

என்னால் முடியும், நம்மால் முடியும், இந்தியாவால் முடியும் இந்த வாசகத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

புதிய விடயங்களை படைக்க வேண்டும் என இலட்சியம் உள்ளவர்களுக்கு அவர்களது வேட்கையே ஊக்கமாக அமையும். மற்றவர்களை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணம் தேவையில்லை.

மிக உயர்ந்த லட்சியம், மனிதர்களுக்கான எல்லை என்ற சுவர்களைத் தகர்க்கிறது.

வெற்றி பெற்றவர்களின் கதைகள் உங்களுக்கு வெறும் தகவல்களை மட்டுமே அளிக்கும். தோல்வி அடைந்தவர்களின் கதை தன் வெற்றி பெறுவதற்கான வழிகளை சொல்லும்.

நம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லா மல் இருக்கலாம் ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரி வாய்ப்புகள் உள்ளன.

எங்கே இதயத்தில் அறம் ஒழுக்கம் இருக்கிறதோ, அங்கே செயல்பாட்டில் அழகு இருக்கும். எங்கே செயல்பாட்டில் அழகு இருக்கிறதோ, அங்கே வீட்டில் ஒத்திசைவு இருக்கும். எங்கே வீட்டில் ஒத்திசைவு இருக்கிறதோ, அங்கே தேசத்தில் ஒழுங்கு இருக்கும். எப்போது தேசத்தில் ஒழுங்கு இருக்கிறதோ, அப்போது உலகில் அமைதி நிலவும்.

வாரிசு அடிப்படையில் ஒருவர் தலைமை இடத்துக்கு வரலாம். ஆனால் தலைவருக்கான தகுதிகளை ஒருவர் சொந்தமாக மட்டுமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

வெற்றி என்பது உன் நிழல் போல. நீ அதைத் தேடிப்போக வேண்டியதில்லை. நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும்போது, அது உன்னுடன் வரும்!

நமது பிறப்பு ஓர் சம்பவமாக இருக்கலாம், ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

தவறான காரியங்களை ஒரு போதும் செய்யக் கூடாது. ஒரு இலக்கை நோக்கி செல்ல பலவழிகள் இருந்தாலும் நேர்மையான வழியே மிகச்சிறந்த வழி என்பதுடன் அது மட்டுமே வழியாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு இந்தியனுக்குள்ளும் உறைந்து கிடக்கும் அக்னிக் குஞ்சுகள் சிறகு முளைத்து பறக்கட்டும்! இந்திய புண்ணியத் திருநாட்டின் புகழ் ஜ்வாலை விண்ணிலும் பேரொளி வீசி பரவட்டும்!

தெளிவான கண்ணோட்டம் இல்லாத தடுமாற்றம் திசை தெரியாத குழப்பம். இதுதான் இந்திய இளைஞர்களை வாட்டும் மிகப் பெரிய பிரச்சினை.

சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

நம்பிக்கையுடன் நகர்ந்து கொண்டே இரு நதி போல... ஒரு இடத்தில் வெற்றி காத்திருக்கும் கடலாக...

முடியாது என்று நீ சொல்வதையெல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்துகொண்டிருக்கிறான்.

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

தன்னம்பிக்கையும் தளராத உழைப்பும்தான் தோல்வி எனும் நோயைக் கொல்வதற்கான மருந்துகள்.

சுயசிந்தனை ஆற்றலும் தன்னம்பிக்கையும், தன்னைத்தானே அறிந்து கொள்ளும் திறனும், நிறைந்த மக்களைக் கொண்டிருக்கும் தேசத்தை எந்த தேசவிரோத அல்லது சுயநல சக்தியாலும் ஆட்டிப் படைக்க முடியாது.

சரியான காரியத்தை செய்ய எளிமையான வழி என்ன என்று என்னிடம் கேட்கிறார்கள். தாயின் முகத்தில் புன்னகை அரும்ப செய்யும் காரியத்தை செய்யுங்கள். அதனை நேர்மையாகவும், கடின உழைப்புடனும் செய்யுங்கள்.

ஒருபக்கம் இருநூறு முன்னூறு ஹீரோக்கள் மறுபக்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும் நூறு கோடி மக்கள்! இது மாற்றப்படவேண்டிய நிலைவரம்.

பல்லாண்டுகளுக்கு முன் என்ன செய்தோமோ அதையே மீண்டும் மீண்டும் தொடர்ந்து செய்வது தோற்கடிக்கப்பட்ட பாதையில் பயணிப்பதை போன்றதாகும்.





# யானைகள் பற்றி அதிகம் அறியப்படாத அரியசெய்திகள்



உலகில் பல்லாயிரக்கணக்கான எண்ணிக்கையில் யானைகள் இருந்தாலும், அவை அனைத்தும் இரண்டு வகையைச் சேர்ந்தவை. ஒன்று ஆசிய யானைகள் மற்றொன்று ஆபிரிக்க யானைகள். ஆபிரிக்க யானைகள் தான் நிலத்தில் வாழும் மிகப்பெரிய விலங்கு. டைனோசர் எல்லாம் நாம் நினைவில் வேண்டுமானால் வாழலாம். இப்போது நிலத்தில் வாழும் விலங்குகளில் யானைகள் தான் பிரம்மாண்டமானவை. ஆபிரிக்க யானைகள் ஆசிய யானைகளைவிட அளவில், உருவத்தில் பெரியவை. ஆபிரிக்க யானைகளுக்கு காதுமடல்கள் பெரியதானவை. ஆண், பெண் இரண்டிற்கும் நிகரானத் தந்தங்கள் உண்டு. ஆசிய பெண் யானைகளுக்கு தந்தங்கள் இருக்காது. சில யானைகளுக்கு மட்டும் அரிதாக இருக்கலாம்.

பெண் ஆசிய யானைகளுக்கு தந்தம் இருக்காது. யானை பிறக்கும் போது சராசரியாக 200 பவுண்ஸ் எடை இருக்கும். இது 30 பிறந்த குழந்தைகளின் எடைக்கு சமமானது. யானைகள் 22 மாதங்கள் கர்ப்பமாக இருந்து குட்டியை ஈன்றெடுக்கும். யானைகளுக்கு கண் இமைகள் உள்ளன. யானைகளுக்கு பிடிக்காத ஒரு உயிரினம் 'தேனீ'. இதன் சராசரியான வாழ்நாள் 70 ஆண்டுகள். ஏறக்குறைய மனித வாழ்நாளை ஒத்த உயிரினமாக இது உள்ளது.

மனிதனின் மொத்த உடலில் உள்ள சதையைவிட யானையின் தும்பிக்கையில் அதிக சதை உள்ளது. யானையின் துதிக்கை மிக விசேடமானது. மொத்தம் 40,000 தசைகளால் ஆனது. இந்தத் துதிக்கையினால் பெருமரக் கிளைகளை ஒடிக்கவும், உடைக்கவும் அதனால் முடியும். அதோடு பெரும் சுமைகளையும் துதிக்கையினால் இவை தூக்கிச் சுமக்கின்றன. உணவை எடுக்கவும் நீர் அருந்தவும் யானை தன் துதிக்கையை பயன்படுத்திக் கொள்கிறது.

யானையின் தந்தம் ஒரு முறை உடைந்தால் மீண்டும் வளராது. பொதுவாக மனிதர்கள் வலது கை பழக்கம் உடையவர்களாக இருந்தாலும், இடது கை பழக்கம் உடையவர்களும் இருக்கிறார்கள் தானே... அது போல யானைகளையும் நாம் அடையாளப்படுத்தலாம். அதாவது, எந்த பக்க தந்தத்தை அது அதிகம் பயன்படுத்துகிறது என்பதை பொறுத்து அதனை அடையாளப்படுத்த முடியும்.

உலக வனவிலங்கு நிதியத்தின் கணக்குப்படி, உலகில் இப்போது 4,15,000 ஆபிரிக்க யானைகள் உள்ளன. 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை ஆசிய யானைகள் உள்ளன. எண்ணிக்கையில் பார்ப்பதற்கு அதிகமாக தெரிந்தாலும், இவை அருகிவரும் விலங்கினமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கு முக்கிய காரணம் வேட்டையாடுதல் தான்.

அரிமா, வேங்கை போன்ற வலிமையான விலங்கினங்களுக்கு இணையான வலிமை கொண்ட ஒரு விலங்காக நிலத்தில் யானை திகழ்கிறது. அதே சமயம் புலி, சிங்கம் போன்ற விலங்குகளை தன்னிடம் நெருங்கவே அச்சுறுத்தும் விலங்காகவும் யானை இருக்கிறது.

பல சிங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு யானையை ஒருவேளை கொல்ல நேரலாம். அவ்வாறு ஏற்படும் சண்டைகள் இளைய யானைக்கும் சிங்கத்திற்குமான சண்டையாகவே இருக்கும். பருமனிலும் ஆகிருதியிலும் பலம் கொண்ட பெரிய யானையை வீழ்த்துவது என்பது மற்ற விலங்கினங்களுக்கு அவ்வளவு எளிதல்ல.

ஒருநாளைக்கு 16 மணி நேரத்தை உணவு சேகரிப்பதற்கு செலவு செய்கிறது யானை. இவற்றின் செரிமானத்திறன் மிக மந்தமானது. எனவே அளவுக்கு அதிகப்படியான உணவை இவை உட்கொள்ள வேண்டியுள்ளது. வளர்ந்த யானை நாள் ஒன்றிற்கு சுமார் 140 - 270 கிலோ வரை உணவை உட்கொள்கிறது.

யானைக் குடும்பத்தில் மொத்தம் 3 சிற்றினங்கள் உலகில் இன்றைக்கு உயிரோடு உள்ளன. ஆபிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆபிரிக்கக் காட்டு யானைகள், ஆசிய யானைகள் இவை மூன்றும்தான் அவை. இந்த இனங்களுக்கு இடையே பல வேறுபாடுகள் உண்டு. இனங்களுக்கு தக்க, நிலத்திற்கு ஏற்ப இவைகளின் குணநலன்கள், அங்க மாறுபாடுகள் ஏராளம் உள்ளன.

ஆபிரிக்க யானைகளின் தலையையொட்டி உள்ள முதுகுபுறம் சற்று உள்நோக்கி வளைந்தும், புடைத்த நெற்றி மேடுகள் அல்லாமல் சமனாகவும் இருக்கும். இவற்றிற்கு துதிக்கை நுனியில் இரண்டு இதழ்கள் இருக்கும். முன்னங்கால்களில் நான்கு முதல் ஐந்து நகங்களும், பின்னங்கால்களில் மூன்று நகங்களும் இருக்கும். ஆசிய யானைகளின் முதுகு சற்று உயர்ந்து மேடாக இருக்கும். நெற்றியில் இரு மேடுகளும் காது மடல்கள் சிறியதாகவும் இருக்கும். இவற்றிற்கு துதிக்கை நுனியில் மேல் நோக்கியவாறு ஓரிதழ் மட்டுமே இருக்கும்.

ஆண் யானை பொதுவாக 3 m உயரமும் 6000kg எடையையும் கொண்டிருக்கும். யானையின் தோல் சுமார் 3cm தடிப்பாக இருக்கும். யானை பெருத்த உடலைக் கொண்டிருந்தாலும் மலையின் மீதும் செங்குத்தான இடங்கள் மீது சரளமாக ஏறவும் இறங்கவும் செய்யும். அந்தத் திறன் அவற்றிற்கு அதிகமாகவே உண்டு.

யானைத் தந்தங்களுக்கு யானைக்கோடு என்ற சிறப்பு பெயரும் உள்ளது. இந்தக் கோடானது யானையின் கடவாய்ப் பற்களின் நீட்சியாகும். இதற்கு எயிறு, தந்தம் என்ற இதர பெயர்களும் இருக்கின்றன. தந்தம் என்றால் பல் என்று பொருள். சராசரியாக தந்தங்கள் பத்து அடி வரை வளரும். அதோடு இத்தந்தங்கள் சுமார் 90 kg எடை வரை கனக்கக்கூடியவை.

## கல்விக்கதிர்

- அகரன் -

# இலங்கையின் காடுகள்

இலங்கையானது சிறப்பான காட்டு வளத்தினை கொண்டுள்ள ஒரு சிறிய தீவாகும். இலங்கையின் மொத்த நிலப்பரப்பில்36.5%வீதமானவை(2,375மில்லியன் ஹெக்டேயர்) காடுகளாக காணப்படுகின்றது. இலங்கையின் இயற்கை தாவரத்தினை காடுகள் என்றும் புல்வெளிகள் என்றும் வகைப்படுத்தலாம். மேலும் இலங்கையின் காடுகளினை 4 வகையாக பாகுபடுத்தலாம்.

ஈரப்பருவக் காற்று காடுகள்
மலைக்காடுகள்
உலர்பருவக் காற்றுக்காடுகள்
முட்காடுகள்

ஈரப்பருவக்காற்று காடுகள்

ஈரப்பருவக் காற்று காடுகளை ஈரலிப்பான மத்திய கோட்டுக்காடுகள் எனவும் அயனமண்டல காடுகள் எனவும் அழைப்பார்கள். இக்காடுகள் இலங்கையின் தென்மேற் பகுதி, மலைநாட்டின் மேற்கு பகுதி ஆகியவற்றில் உண்டு. கடல் மட்டத்திலிருந்து ஏறக்குறைய1,000மீற்றர் அளவில் இவை வளர்ந்திருக்கும். தென்மேற்கு பருவக்காற்றினால் இக்காடுகள் அதிக மழையினை பெறுகின்றன. குறிப்பாக 2,000மில்லிமீற்றர் மழையினை பெறுகின்றது. அத்துடன் 5,000மில்லிமீற்றர் வரை மழை பெறுகின்ற பகுதிகள் இப்பாகத்தில் இருப்பதால் தாவர வளர்ச்சி விரைவாக நடைபெறுகின்றது.

இக்காடுகளின் இலைகள் அகலமானவையாகவும் அதிக உயரம் கொண்டவையாகவும் காணப்படுகின்றது. இக்காடுகளில் பாலை, தளபத்து, கித்துள், பலா, மலைவேம்பு, நா, டூன், லுனுமில, நாகமரம், கோரா ஆகிய மரங்கள் காணப்படுகின்றன. பொதுவாக இக்காடுகள் கலப்பு காடுகளாக விளங்குகின்றன. ஈரவலயங்களில் இக்காடுகள் மனித குடியிருப்புக்கள், பொருளாதார தேவைகளுக்காக பெருமளவில் அழிக்கப்பட்டு விட்டன. இன்று சிங்கராஜவனக்காடுகள் மாத்திரம் சிறப்பு பெற்று விளங்குகின்றது.

### மலைக்காடுகள்

இக்காடுகள்1,000மீற்றருக்கு மேற்பட்ட பிரதேசத்தில் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் மரங்கள் உயரம் குறைவாகவும், தடித்த இலைகள் கொண்டதாகவும், அதிக இலைகள் கொண்டதாகவும், பட்டைகள் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இவ் மரங்களின் கீழே இலைச் செடிகள் வளர்கின்றன. இம்மரங்களுள் தினா, தம்ரோ, ஏப்பு ஆகியன முக்கியமானவையாகும்.

இவற்றின் உயரம் குறைவாக இருப்பதனால் மழைவீழ்ச்சி அதிகமாகவும் வெப்பநிலை குறைவாகவும் இடை வெப்பவலையத்தினை கொண்டவையாகவும் விளங்குகின்றது. இக்காடுகள் பாறைதொடரிலும், உயர்ந்த சரிவுகளிலும் காணப்படுகின்றன. இக்காடுகள் பொதுவாக சிவனொளிபாதமலை, பேதுருதாலகால மலை பகுதிகளில் வளர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### உலர்பருவக் காற்று காடுகள்



இக்காடுகள் அதிக வறண்ட தன்மையினை கொண்டுள்ளது. இக்காடுகள் இலங்கையின் வடசமவெளியிலும், தென்கீழ் சமவெளியிலும் காணப்படுகின்றது. இக்காடுகள் வடகீழ் பருவக்காற்று மூலம் சிறிதளவு மழையினையும், தென்மேல் பருவக்காற்று காலத்தில் வறட்சியினையும் கொண்டு வளர்கின்றது. தென்மேல் பருவ காற்று காலநிலை நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் இலைகள் உதிர்ந்து போகின்றன. இக்காடுகளில் உள்ள மரங்கள் சராசரியாக 15மீற்றர் உயரமாகும். உயர்ந்த மரங்கள் 20 மீற்றர் வரை வளர்கின்றன. இக்காடுகள் இடையே முட்புதர்கள், செடிகள் ஆகியன வளரும்.

இக்காடுகளில் இருக்கும் மரங்கள் என்றும் பசுமையான வைரமானவையாக விளங்குகின்றன. குறிப்பாக முதிரை, கருங்காலி, யாவரணை, கல்விலா ஆகியவற்றினை கூறிக்கொள்ளலாம். இக்காடுகள் பொருளாதார பெறுமதி வாய்ந்தவையாக காணப்படுகின்றது. இக்காடுகள் விறகு தேவை, குடியேற்ற தேவைகளுக்காக அதிகளவில் இன்று அழிக்கப்பட்டு வருகின்றன.

### முட்காடுகள்

மழைவீழ்ச்சி மிக குறைவாகவும் ஆவியாக்கம் அதிகமாகவும் நிகழும் பகுதியில் இக்காடுகள் காணப்படுகின்றன. வருடாந்த மழைவீழ்ச்சி 1,250மில்லிமீற்றருக்கும் குறைவாக கிடைக்கப்பெறும் மன்னார், அம்பாந்தோட்டை பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன.

இக்காடுகளில் உயரம் குறைந்த மரங்கள், முட் செடிகள் அதிகளவில் காணப்படுகின்றன. இக்காட்டில் உள்ள மரங்களின் இலைகள் நிறைவாகவும் அடிப்பகுதியில் முறுக்கப்பட்டவையாகவும் காணப்படும். இத்தாவரங்கள் வறட்சியினை தாங்கி வளர்பவையாக காணப்படுகின்றன. குறிப்பாக ஆனைமுள்ளி, வீரை, காம்பை முறுக்கினன், நாகதாளி, கள்ளி, காரை, சூரை, ஈச்சை என்பன இங்கு வளர்கின்றன. இத்தாவரங்களை வறள்நில வளரிகள் எனவும் கூறுவார்கள். இக்காடுகளில் விடத்தல், அடம்பன் ஆகிய கொடிகளும் வளர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# நேர்காணல்



நேர்கண்டவர் - திருமலை தட்சா

## “வாடிக்கையாளரின் திருப்தியே ஒரு ஒப்பனையாளரின் வெற்றியாகும்”

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் சாதனா இந்துஜன். Sky Beauty Care எனும் அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன். கடந்த இரு வருடங்களாக அழகுக் கலைத் துறையில் சேவையாற்றி வருகின்றேன்.

**02) அழகுக் கலைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றி?**

இத்துறையில் நான் நுழைவதற்கு முதற் காரணம் எனது சகோதரி தான். எதிர்பாராமல் இத்துறையில் நுழைந்த எனக்கு சிறுவயதிலிருந்தே மேக்கப் என்றால் மிகவும் பிடிக்கும். அதுவே என்னை இத்துறையை தேர்ந்தெடுக்க வைத்தது என்று நினைக்கிறேன்.

**03) உங்களது அழகுக்கலை நிலையம் பற்றியும், அதன் சேவைகள் பற்றியும்?**

என்னுடைய அழகுக்கலை நிலையத்தின் பெயர் Sky Beauty Care. Hair & beauty care தொடர்பான சகல சேவைகளையும் தரமான, நியாயமான விலையில் வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப திருப்தியான சேவையாக வழங்கி வருகின்றோம்.

**04) ஒப்பனை கலைஞரின் மிக முக்கியமான பொறுப்பு எதுவாக இருக்கும்?**

காலத்திற்கு ஏற்புடைய நவீன நுட்பங்களைப் பயன்படுத்தி ஒரு வாடிக்கையாளரின் தேவை, விருப்பம் என்னவென்று அறிந்து அவர்களுக்குரிய சரியான தெரிவை நியாயமாகவும், தரமானதாகவும் வழங்குவதே மிக முக்கியமான பொறுப்பு. வாடிக்கையாளரின் திருப்தியே ஒரு ஒப்பனையாளரின் வெற்றியாகும்.

**05) ஒரு வாடிக்கையாளர் தங்களது தோற்றத்தில் மகிழ்ச்சியடையவில்லை எனின், அது குறித்து உங்களது கருத்து எதுவாக இருக்கும்?**

முதலில் அவர்களது எண்ணத்தை மாற்ற வேண்டும். இயற்கையின் படைப்பில் எல்லோரும் அவரவர் தோற்றத்திலும், நிறத்திலும் அழகானவர்களே! அதை சற்று மேலும் மெருகூட்டி காட்டுவதற்கே நாங்கள் இருக்கின்றோம்.

**06) உங்களது வாடிக்கையாளரின் நலன் கருதி அழகுசாதனப் பொருள்களை எவ்வாறான முறையில் பரிந்துரை செய்து வருகிறீர்கள் என்பதோடு அதன் மூலமாக அவர்களின் திருப்தி எவ்வாறு உள்ளது?**

ஒவ்வொருவரின் தோல் அமைப்பும் ஒரே மாதிரியாக இருக்காது. அவ் வகையில், ஒவ்வொரு வாடிக்கையாளரின் தோல் அமைப்பிற்கு ஏற்றவாறான அழகுசாதனப் பொருள்களை தெரிவு செய்து வழங்கி வருகின்றேன். அத்துடன் அவர்களிடம் உடலுக்குத் தேவையான ஆரோக்கியமிக்க காய்கறிகள், பழங்கள், சத்தான உணவுகளை எடுத்துக் கொள்ளல், தண்ணீர் குடிப்பதை அதிகப்படுத்தல் போன்ற விடயங்களையும் பரிந்துரை செய்து வருகின்றேன். இதன் மூலமாக வாடிக்கையாளரிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைப்பதோடு மீண்டும் மீண்டும் எங்களை நாடி வருகின்றனர்.



**07) இத்துறை மீதான சமீபத்திய போக்குகளை எவ்வாறு கைக்கொண்டு வருகின்றீர்கள்?**

தற்சமயம் இத்துறை சார் போட்டிச் சூழல் அதிகமாகவே காணப்படுகிறது. வாடிக்கையாளர்கள் பெருமளவில் இத்துறையில் காலத்திற்கேற்றவாறான விடயங்களை அறிந்து வைத்துள்ளார்கள். அதனால் நாம் புதிய நுட்பங்கள் சார்ந்த விடயங்களை தேடித்தேடி கற்க வேண்டியதாகவே உள்ளது. ஆகவே, அதிக போட்டி நிறைந்த சூழலில் நவீன காலத்திற்கு ஏற்றவாறான விடயங்களை கற்பதன் மூலமே நிலைத்து நிற்க முடியும். இது சற்று சவாலாகவே உள்ளது.

**08) இத்துறை சார்ந்த சக பணியாளர்களுடன் பயணித்து வருகையில், அதன் போட்டித் தன்மை எவ்வாறு உள்ளது?**

போட்டித் தன்மை நிறைந்த சூழலிலே பல சவால்களை எதிர்கொள்ள முடியும். ஒருவரின் வெற்றிக்கு ஆரோக்கியமான போட்டித் தன்மை மிகவும் அவசியம். சவால்களில் வெற்றி கண்டால் தான் சிகரத்தை தொட முடியும்.

**09) தற்சமயம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் மத்தியில் ஒப்பனை அலங்கார முறைகளை பின்பற்றுவதற்கு விரும்புகின்றார்களா? ஆம் எனின் அவர்களின் திருப்தியுடன் வருமானத்தை ஈடு செய்ய முடிகின்றதா?**

ஆம். நாட்டில் தற்போது காணப்படும் நிலைமையால் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள சற்று கடினமாகவே உள்ளது. அதிக வருமானம் இல்லாவிட்டாலும் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வேண்டிய சூழலுக்கு இன்று அனைவருமே தள்ளப்பட்டுள்ளோம் என்பது வேதனைக்குரிய விடயமே!

**10) அழகுக்கலைத் துறையிலுள்ள பலம், பலவீனம் குறித்து?**

பலம் என்றால் தரமான சேவை, நியாயமான விலை, திருப்தியான வாடிக்கையாளர், பலவீனம் என்றால் போட்டி நிறைந்த சூழல்.

**11) அழகுக்கலை கலைஞராக நீங்கள் ஆற்றும் சேவைகள் குறித்து?**

நான் கற்றுக் கொண்ட கலையை என்னால் முடிந்த வரை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்து வருகிறேன். இதனால் வேலைக்குச் செல்லாமல் இருக்கும் சில பெண்கள் என் போல் சுயமாகவே தொழிலை மேற்கொண்டு வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கான வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் வகையில் செயலாற்றுகிறேன்.

**12) நிறைவாக, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு கூற விரும்புவது?**

பெண்கள் என்றாலே வீட்டிற்குள் தான் இருக்க வேண்டும் என்றல்ல. கல்வி கற்றால் தான் வேலைக்குச் சென்று வருமானம் பெறலாம் என்ற எண்ணத்தை விடுத்து உங்களுக்குள் இருக்கும் திறமை எதுவாக இருந்தாலும் அதனை வெளிக்கொணர்ந்து அதனூடான துறையில் உங்களை முழுமையாக வளப்படுத்தி அதற்கான களத்தை நீங்களே முயற்சி செய்து அமைத்துக் கொள்ளுங்கள். முன்னேற்றத்தை படிப்படியாக நகர்த்திச் செல்லுங்கள். சாதனைகளை குவியுங்கள். நாளை இன்னொருவருக்கு நீங்களே முன்மாதிரியாக இருப்பீர்கள்.

## பசியின் யாகம்

அவன் வாழ்க்கை
இடுப்பளவு
உப்பு நீரினுள்ளே

கதகதப்பை
உணரமுடியாது
தென்றலின்
தழுவலை இரசிக்க
முடியாது

இடுப்பின் மேலே
அவன் வயிற்றின்
வெறுமை,
காத்திருக்கும்
சில உறவுகளுக்கான
ஒருநேர உணவுப்
போராட்டம்

காலின் இடையில்
நுழையும் மீன்களின்
வருகையும்
வீட்டில் அவன்
வருகையும்
ஒற்றைப்புள்ளியில்
காத்திருப்பாக

- கனக.தீபகாந்தன் -

## மழையும் அப்பாவும்

அப்பாவோடு நெடுந்தூர பயணம்
அது ஒரு மழைக்காலமாய் இருந்தது
இயற்கையை ரசித்தபடி
ஆனந்தமாய் இருந்தது பயணம்

மழை கூடுதலாய் இருந்ததால்
குளிரும் அதிகமானது
தேநீர்கடையில் இருவருமாய்
ஒதுங்கி நின்று தேனீர் அருந்தினோம்

மழை இளகும் வரை
அங்கேயே நின்றிருந்தோம்
வெள்ளநீர் சலசலவென
ஓடிக்கொண்டே இருந்தது

எனக்கு சிறுவயது
நினைவுகள் துளிர்த்தன
காகித கப்பல் விட்ட ஞாபகத்தோடு
அம்மாவிடம் அடிவாங்கியதும் கூட
நிழலாடியது

மாலைநேரவகுப்பிற்கு
நண்பிகளோடு சென்று
மழையில் நனைந்து துள்ளி விளையாடி
மழையை ரசித்திருக்கிறேன்
அந்தநினைவுகளை மீட்டுகையில்
பெரு மழை சிறுதூறலானது

அப்பா மழை ஓய்ந்து கொண்டிருக்கிறது
நாம் செல்வோமா? எனக்கேட்க
செல்லலாமென பதில் வந்தது

பயணத்தை தொடர்கையில்
மழையில் நனைந்து அலைந்து திரியும்
பறவைகள் மிருகங்களை காண்கிறேன்
அப்பாவிடம் கேள்வி
கேட்டு கொண்டிருந்தேன்

பதிலுக்கு அவரும் பேச்சு கொடுத்தபடியே
முடிவுற்றதுபயணம்.

எத்தனையோ மழைக்காலத்தினை
அப்பாவோடு இணைந்து ரசித்து
கொண்டாடி களித்திருக்கிறேன்
இப்போது அவரோடு பயணிக்க
முடியாதவளாய்
நான் அப்பாவோடு சென்ற அந்த சிறுவயது
மறுபடி வந்திடாதா? என்ற ஏக்கத்தோடு

- மோகனா தாசன் -

# கலைக் கதிர்



# கம்ப இராமாயணம் இராமனின் காதல் திருமணம்

## இலக்கிய நயம்



இராமாயணம் என்றால் இராமன் + அயனம் என்று அர்த்தம். அயனம் என்றால் வழி, பாதை என்று பொருள். தட்சிணாயனம், உத்தராயணம் என்று சொல்லுவது போல.

இராமாயணம் என்றால் இராமன் காட்டிய வழி என்று பொருள்.

இராமனை தெய்வமாகத் தொழுபவர்கள், அவன் வழியில் நடக்க விரும்புபவர்கள், காதல் திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது ஏன் என்றால் இராமன் காதல் திருமணம் தான் செய்து கொண்டான்.

இது என்ன புதுக் கதையாக இருக்கிறது. இதுவரை யாருமே சொல்லவில்லையே. எத்தனையோ முறை இராமாயணம் படித்து இருக்கிறோம், கேட்டு இருக்கிறோம், யாரும், இதுவரை இராமன் காதல் திருமணம் செய்து கொண்டான் என்று சொன்னதே இல்லையே என்று நீங்கள் நினைக்கலாம்.

கம்பன் சொல்லியதை திரும்பிச் சொல்கிறேன். முடிவை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.

காதல் எப்படி வரும்? முதல் பார்வையிலேயே எங்கோ ஒரு மணி அடிக்கும். அடி வயிற்றில் இனம் புரியாத ஒரு சங்கடம். இவள் தானா ? இவன் தானா என்று இதயம் ஒரு தடம் துடிப்பது மறக்கும். மீண்டும் ஒரு முறை பார்க்கத் தோன்றும். பார்த்துக் கொண்டே இருக்கத் தோன்றும். கிட்ட போக வேண்டும். பேச வேண்டும், கூடவே இருக்க வேண்டும் என்றெல்லாம் தோன்றும் என்று சொல்லுகிறார்கள். ஒரு கணம் கூட பிரிந்து இருக்க முடியாது. பிரிந்தாலும் மற்றவர் நினைவாகவே இருக்கும் என்றும் சொல்லுகிறார்கள்.

அப்படி எல்லாம் இராமாயணத்தில் இருந்ததாக சொல்லி இருக்கிறதா ? ஒரு வேளை அப்படி சொல்லி இருந்தால் அது காதல் என்று ஏற்றுக் கொள்வீர்களா? இப்போதே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இராமன் மிதிலை நகர் வீதியில் வருகிறான். மாடத்தில் சீதை தோழிகளோடு பந்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். கை தவறி பந்து வீதியில் செல்லும் இராமன் மேல் விழுந்து விடுகிறது.

மாடத்தில் இருந்து சீதை எட்டிப் பார்க்கிறாள். பந்து எங்கிருந்து வந்தது என்று இராமன் மேலே பார்க்கிறான். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

அந்த ஒரு கணத்தை கம்பன் படம் கிளிக் செய்வது போல படம் படிக்கிறான்.

கணக்கில் அடங்காத நல்ல குணங்கள் உள்ள சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். அவர்கள் கண்கள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டன. அவர்கள் உணர்வுகள் ஒன்று பட்டது. அண்ணலும் நோக்கினாள் , அவளும் நோக்கினாள்

என்கிறான் கம்பன்.

உலகில் எந்த மூலையில் தேடினாலும் இது போல ஒரு **romantic** பாடல் கிடைப்பன அரிது.

**எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்றுழி.**
**கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று**
**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோன்கினாள்**

இந்தப் பாடலை எத்தனை ஆயிரம் முறை கேட்டு இருப்போம். இதில் என்ன பெரிய புதுமை இருக்கிறது. ஆனாலும், அதற்கு இவ்வளவு பில்ட் அப் தேவையா என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

இருவரில் யார் முதலில் பார்த்தது? சீதை முதலில் பார்த்தாளா? இராமன் முதலில் பார்த்தானா?

அண்ணல் நோக்கினான். அவளும் நோக்கினாள் என்று சொல்லி இருந்தால் முதலில் இராமன் பார்த்தான், பின் சீதையும் பார்த்தாள் என்று வரும்.

அவள் நோக்கினாள் . அண்ணலும் நோக்கினான் என்று சொல்லி இருந்தால் முதலில் சீதை பார்த்தாள். பின் இராமன் பார்த்தான் என்று வரும்.

கம்பன் அப்படி சொல்லவில்லை.

அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள் என்கிறான்.

இருவரும் ஒரே சமயத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பார்வைகள் ஒன்றை ஒன்று ஒரே சமயத்தில் பார்த்துக் கொண்டன. இன்னும் சொல்லப் போனால், பார்வைகள் பார்த்துக் கொள்ளவில்லையாம்.

பார்வைகள் சந்தித்தன. அவர்களால் அந்த பார்வையை நகர்த்த முடியவில்லை. கண்ணை எடுக்க முடியவில்லை. அவளோ தோழிகளோடு மாடத்தில் நிற்கிறாள். அவனோ, வீதியில் பல வித மக்களோடு நடந்து போய் கொண்டிருக்கிறான். நின்று பார்க்க முடியாது. பார்வையை தவிர்த்தே ஆக வேண்டும். ஆனாலும் முடியவில்லை.

கண்ணொடு கண் இணை கவ்வி

கண்கள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டனவாம். கவ்விக் கொண்டது என்றால் அதை எளிதில் எடுக்க முடியாது. லொக் ஆகி விட்டது என்று சொல்வார்களே அது மாதிரி. இழுத்தாலும் வர மாட்டேன் என்கிறது. இருவருக்கும் சங்கடம்தான். பார்வையை மாற்ற விரும்புகிறார்கள். முடிந்தால் தானே. கண்கள் கவ்வி பிடித்துக் கொண்டன. அறிவு சொல்கிறது, ஏய் , எல்லோரும் பார்க்கிறார்கள். அப்படி பார்க்காதே, நாகரிகம் இல்லை என்று. கண் விட்டால்தானே.

சரி, இப்படி ஒரு பெண் முன் பின் தெரியாத ஒரு ஆணை இப்படி பார்க்கலாமா? அது அவ்வளவு நல்ல செயலா. ஒரு பெண் பால்கனியில் நின்று தெருவில் போகும் ஆணை முறைத்துப் பார்த்து கொண்டிருந்தால், நாம் அவளைப் பற்றி என்ன நினைப்போம்.

அப்படி எதுவும் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்று முதலிலேயே கம்பன் சொல்லி விடுகிறான்

எண்ண அரு நலத்தினாள்

எண்ணில் அடங்கா நல்ல குணம் கொண்டவள் என்று. பொறுமை, கருணை, அன்பு, பாசம், நேசம், அருள் என்று எத்தனை நல்ல குணங்கள் உன்டோ அதற்கெல்லாம் மேலும் நல்ல குணங்கள் உள்ளவள் அவள். இருந்தும் என்னவோ அவனைப் பார்த்ததும் காதல் வந்து விட்டது.

சரி, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் மனதில் என்ன ஓடியது?

'அடடா, இவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள். இவளை திருமணம் செய்து கொண்டால் எவ்வளவு நல்லா இருக்கும். அதுக்கு முன்னாடி அவளை கூட்டிக் கொண்டு பார்க், பீச், சினிமா என்று ஜாலியா சுத்தலாம் என்றெல்லாம் நினைத்திருப்பானோ? அவள் என்ன நினைத்து இருப்பாள் ? என்ன ஒரு கம்பீரமான ஆள் இவன். இவனை திருமணம் செய்து கொண்டால் வாழ்க்கையில் செட்டில் ஆகி விடலாம் என்று அவள் நினைத்து இருப்பாளோ .

இரண்டுமே இல்லை. அதெல்லாம் நம்ம ஊரு லோக்கல் கதாநாயகன், கதாநாயகி நினைப்பது.

பின் அவர்கள் என்னதான் நினைத்தார்கள்.

ஒன்றுமே நினைக்கவில்லை என்கிறான் கம்பன்.

நிலைபெறாது உணர்வும் ஒன்றிட

இந்த உணர்ச்சிகள் இருக்கிறதே ஒரு நிலையில் நிற்காது. அலைந்து கொண்டே இருக்கும். அவர்கள் பார்த்த அந்த ஒரு கணத்தில் உணர்ச்சிகள் ஒன்றுபட்டுவிட்டன. வேறு எந்த எண்ணமும் இல்லை. ஒன்றி விட்டது.

இத்தனையும் நிகழ்ந்தது ஒரு நொடியில். அல்லது அதற்கும் குறைவான நேரத்தில்.

சரி, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள் அதை வைத்துக் கொண்டு அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்தார்கள் என்று எப்படி சொல்லுவது ?



ஆக்கம்:- பிரியதர்ஷினி பன்னீர்ச்செல்வம்
பிரதி அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார் மடம்.

# கற்றாழைச் செய்கை

கற்றாழை வறட்சியான பகுதிகளில் வளர்ப்பதற்கேற்ற ஒரு மருந்துச் செடி ஆகும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு அழகுச் சாதனங்கள் மருந்துப் பொருள்கள் தயாரிப்பதற்கு கற்றாழை பெரிதும் பயன்படுகின்றது. வறட்சிக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கும். கற்றாழை லில்லியேசி தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஆபிரிக்காவை தாயாகமாகக் கொண்டது. இலங்கையில் கரையோரப்பகுதிகளில் அதிகளவில் காணப்படும் கற்றாழை முக்கியமான பணப்பயிர்களில் ஒன்றாக மாறியுள்ளது.

கற்றாழை இலையிலிருந்து எடுக்கப்படும் 'ஜெல்' சருமத்தின் ஈரத்தன்மையை பாதுகாக்கிறது. இதன் தேவைக்கு இயற்கை சூழ்நிலையிலிருந்து கற்றாழைச் செடிகள் சேகரிக்கப்பட்டு பக்குவப்படுத்திய பிறகு மருந்துப்பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும், தரம் வாய்ந்த கற்றாழை ஜெல்லை எடுப்பதற்கு தென்னாப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், இந்தியா ஆகிய நாடுகளில் வணிகரீதியாக பயிர் செய்யப்படுகிறது.

### பயன்கள்

கற்றாழையின் இலையிலிருந்து எடுக்கப்படும் 'ஜெல்' சருமத்தை பாதுகாப்பதாக கருதப்படுகிறது. சூரிய ஒளியுடன் கலந்துவரும் கடும் வெப்பத்தை ஏற்படுத்தும் காமா மற்றும் எக்ஸ்ரே கதிர் வீச்சுகளின் தீய விளைவுகளிலிருந்து சருமத்தை பாதுகாக்கின்றது. மேலும் சருமத்தின் ஈரத்தன்மையை காத்து சருமத்தின் நிறத்தையும் மேம்படுத்துகிறது. இதனால் வணிக ரீதியாக அதன் 'ஜெல்' உலகெங்கிலும் சரும் லோசன், சவரம் செய்வதற்கான கிறீம், ஜூம்பூ ஆகியவற்றில் சேர்க்கப்படுகின்றது.

கற்றாழையின் இலையில் 'அலோயின்' 'அலோசோன்' போன்ற வேதிப்பொருள்கள் உள்ளன. 'அலோயின்' வேதிப்பொருளின் அளவு நான்கிலிருந்து இருபத்தைந்து சதம் வரை இதன் இலையில் காணப்படுகிறது.



சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கற்றாழைச்சாறு, இருமல், சளி, குடல்புண் ஆகியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகின்றது. கடும் வயிற்றுப்புண், தோலில் ஏற்படும் தீக்காயம், அரிப்பு வெட்டுக்காயங்கள் ஆகியவற்றிற்கும் மருந்தாகப் பயன்படுகின்றது.

Aloe barbedensis miller எனும் இனமே இலங்கையில் காணப்படுகின்றது. எல்லாவகையான மண்ணிலும் கற்றாழையை செய்கை பண்ணலாம். காரத்தன்மை 7 முதல் 8.5 வரை உள்ள மண் வகைகளில் கற்றாழை வளர்கின்றது. நல்ல வடிகால் வசதியுடன் கூடிய மணற்பாங்கான நிலம் மிகவும் ஏற்றது.

25 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உள்ள பகுதிகளில் வணிகரீதியாக பயிர் செய்யலாம்.

### நடுகை

தாய்ச்செடியிலிருந்து ஒன்று அல்லது இரண்டு மாத வயதுடைய 3 - 5 இலை உடைய பக்க உறிஞ்சிகளைப் பிரித்து பயன்படுத்த வேண்டும். ஒரே அளவிலுள்ள பக்கக் உறிஞ்சிகளைத் தேர்ந்து எடுப்பது மிகவும் முக்கியம். இதனால் செடிகள் சீராக வளர்வதுடன் ஒரே சமயத்தில் அறுவடைக்கு வரும். கற்றாழையை தனிப் பயிராக செய்கை பண்ணும் போது ஏக்கருக்கு 6,000 - 7,000 உறுஞ்சிகள் தேவைப்படும். அதாவது 1,500 - 1,750 உறுஞ்சிகள் நான்கு பரப்பிற்கு தேவை.

### நிலம் பண்படுத்தல்

நிலத்தை இரண்டு முறை உழுது எக்கருக்கு 1,500 கி.கி. எரு இட்டு சமன் செய்து சிறிய பாத்திகளை அமைக்க வேண்டும். செடிகள் நன்றாக வளர்வதற்காக மூன்று அடி இடைவெளி விட்டு நடுகை செய்ய வேண்டும். 2 அடி x 3 அடி, 1 அடி x 3அடி, 1.5 அடி x 2 அடி போன்ற இடைவெளியிலும் நடுகை செய்யலாம்.

### பசளைப் பாவனை

கற்றாழைச் செடிகளுக்ய் இராசயன உரங்கள் தேவைக்கேற்ப இடவேண்டும். வளமான நிலங்களுக்கு எரு இடல் போதுமானது. ஏக்கருக்கு 1,500 கி.கி.எனும் வீதத்தில் ஒவ்வொரு வருடமும் எரு இடவேண்டும். வளம் குறைந்த மண்ணிற்கு 200 கிராம் அசேதன உரத்தை ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தாவரத்திற்கு எனும் வீதத்தில் இடவேண்டும்.

### நீர்ப்பாசனம்

கற்றாழையை மானாவாரிப் பயிராக பயிர் செய்ய ஏற்றது. கோடைக்காலத்தில் பயிர் செய்ய ஐந்து நாள் நீர்ப்பாசன இடைவெளி போதுமானதாக அமையும்.

### நோய் பீடைத்தாக்கம்

கற்றாழையில் அதிக பூச்சி நோய் ஏற்படுவதில்லை. நீர் தேங்கும் நிலத்தில் அழுகல் நோய் ஏற்படும். நிலத்தில் வடிகால் வசதியை ஏற்படுத்துவதன் மூலம் இத்தாக்கத்தை குறைக்க முடியும்.

### விளைச்சல்

ஒரு தாவரத்திலிருந்து ஒரு வருடத்திற்கு 8 கி.கி. கற்றாழை இலையை விளைச்சலாக பெறலாம். இலையில் 80 முதல் 90 சதம் நீர் உள்ளதால் விரைவாக பழுதடைந்து விடும் இதனால் அறுவடை செய்த உடனே இலைகளை பக்குவப்படுத்தி அவற்றிலிருந்து ஜெல்லை பிரித்தெடுக்க வேண்டும். அறுவடையின் போது இலையின் விட்டம் 6 - 10 செ.மீ. ஆகவும் நீளம் 2 அடி ஆகவும் காணப்படுதல் சிறந்தது. அறுவடையின் போது இலையில் காணப்படும் வெள்ளைப்புள்ளிகள் மறைந்து இலை முழுமையாக பச்சையாக மாறி காணப்படும். முதிர்ச்சியடைந்த இலையில் ஆலோயின் அளவு மிக குறைவாகக் காணப்படும். ஒரு இலையின் நிறை 700 - 1,500 கிராம் வரை வேறுபடும். ஒரு வருடத்தில் ஒரு தாவரத்தில் இருந்து 12 இலைகள் வரை 3 தடவைகளில் அறுவடை செய்யலாம்.



# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் 'பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்' நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் - 03

கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம், இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)




இலக்கம் 891 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மற்றும் இலக்கம் 84 ஏ இராசாவின் தோட்டம் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் யாழ் ஊடக அமையம் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து பல ஊடகப் பணிகளை ஆற்றவுள்ளன. இப்பணிகளை விளக்கும் நோக்குடன் வெளியிடப்பட்ட ஆக்கத்தின் மூன்றாவது பகுதி இதுவாகும்.

1)பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பணி விளக்கம்.

2)பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இன்று வரை ஆற்றிய பணிகள்.

3)பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மூலம் வெளியிடப்பட்ட ஊடகவியல், நூல்களின் விவரப்பட்டியல்.




4) விருது பெற்ற அச்சு மின் மற்றும் சமூக ஊடகவியல், நூல்களின் விவரப்பட்டியல்.

5) விருது பெற்ற ஊடகவியல் நூல்கள்

6) பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மூலம் வெளியிடப்பட்ட அச்சில் உள்ள நூல்கள்.

7) 2011இல் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா - ரீ.சி.என்.எல் இணையத்தளம்

8) 20012இல் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா - ரீ.சி.என்.எல் ரீ.வி

- இவற்றை ஏற்கனவே பார்த்துள்ளோம்.

### கோயம்புத்தூர் பாரதியார் பல்கலையின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையம்

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையமாக மாற்றப்பட்டு 2013ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டுவரை மொத்தம் 13 ஊடகவியல் முதுகலைமாணி பட்டதாரிகள், 23 ஊடகவியல் இளங்கலைமாணி பட்டதாரிகள் உட்பட ஏறக்குறைய 65க்கு அதிகமான பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. இதில் 26 பேர் ஊடகவியல் பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

### நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்

இப்பணிகளில் முக்கியமாக இரண்டு பணிகள் முன்னுரிமைப்படுத்தப்படும். முதலாவது வட இலங்கை செய்தியாளர் பணி விவரக் கையேடு வெளியிடல் அமையும்.

இரண்டாவதாக செய்தியாளன் ஊடக தூது மடல் - ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம் என்னும் விருது வாக்குடன் மாதாந்தம் இலவசமாக வெளியிடப்படும் செய்தி மடல் அமையும். இது விரைவில் வெளியிடப்படும்.

இவற்றை விட பிரத்தியேக ஊடக நூல் நிலையம் - மறைந்த செய்தியாளர்களின் வரலாற்றைப் பதிவு செய்தல் - ஊடக விருது - ஊடகக் கல்வி - ஊடக ஆய்வு வெளியீடு - செய்தியாளன் ஊடக தூது மடல் - ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம் என்னும் விருது வாக்குடன் மாதாந்தம் இலவசமாக வெளியிடல் - ஊடக இலங்கை ஊடக நூல்களின் பட்டியல் - ஊடக நூல் வெளியீடு - அச்சு மின் இணைய ஊடகங்களின் வரலாற்றினைப் பதிவு செய்தல் போன்ற பல பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

### வட இலங்கை செய்தியாளர் பணி விவரக் கையேடு

வட இலங்கை செய்தியாளர் பணி விவரக் கையேட்டை இலக்கம் 891, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மற்றும் இலக்கம் 84 ஏ, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் யாழ் ஊடக அமையம் ஆகியன இணைந்து தொகுத்து வெளியிடவுள்ளன.

இந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் வட இலங்கை செய்தியாளர் பணி விவரக் கையேடு வெளியிடப்படும். இந்தக் கையேட்டில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - முல்லைத்தீவு - வவுனியா - மன்னார் ஆகிய 05 மாவட்டங்களில் (01) அச்சு ஊடகம் (02) மின் ஊடகம் (03) இணைய ஊடகம் ஆகியவற்றில் 1980 முதல் தற்போது வரையான காலப்பகுதியில் - பணியாற்றிய - பணியாற்றுகின்ற செய்தியாளர்கள் மற்றும் அலுவலகச் செய்தியாளர்களின் தகவல்கள் உள்ளடக்கப்படும்.

இத்தொகுப்பில் சுயாதீன செய்தியாளர்கள் - பத்தி எழுத்தாளர்கள் - ஊடகத்தில் பல்வேறு பணிபுரிவோர் - பொதுவான எழுத்தாளார்கள் மற்றும் இயல், இசை, நாடகக் கலை படைப்பாளிகள் உள்ளடக்கப்பட மாட்டார்கள். தரப்படும்தகவல்களின் உண்மைத்தன்மை ஊடகத்துறை நிறுவன தலைவர் அல்லது ஊடக பிரதம ஆசிரியர் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.




இது தொடர்பான விண்ணப்பங்களை கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள், பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், இலக்கம் 891 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பலாம்.

மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் rmpillai01gmail.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி
- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

com என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

### குறிப்பு

01. வட இலங்கை செய்தியாளர் பணி விவரக் கையேடு மறைந்து போன வட இலங்கைத் தமிழ் செய்தியாளர்களுக்கு அர்ப்பணம் செய்யப்படும்.

02. மறைந்த வட இலங்கைத் தமிழ் செய்தியாளர்களின் படம் குறிப்புக்களுடன் கையேட்டில் வெளியிடப்பட இருப்பதால் அவர்களின் படம் மற்றும் விவரங்களை வைத்திருப்பவர்கள் தந்துதவுங்கள். (பிரதி எடுத்த பின்னர் படம் மீளளிக்கப்படும்.)

03. வட இலங்கையில் இயங்கும் ஊடக அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் விவரங்களும் இணைக்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள் தந்துதவுங்கள்.

- இப்பணியை இயன்றவரை முழுமையாக்க உதவ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஊடக நிறுவனங்களே - ஊடக அமைப்புக்களே - ஊடக அமையங்களே - பத்திரிகை ஆசிரியர்களே - செய்தியாளர்களே - இப்பணி பற்றி அனைவருக்கும் தெரிவியுங்கள். தங்கள் ஊடகத்திலும் செய்தியாக்குங்கள். நாமும் இயன்றவரை விளம்பரப்படுத்துவோம்.

எல்லோரினதும் ஆலோனைகளும் பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றன.



- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா-
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

# ஆடி அமங்கல மாதம் அல்ல அம்மனைத் துதிக்கும் மாதம்



பனிரெண்டு மாதங்களும் வருகின்றன. போகின்றன. சில மாதங்களை சிறப்பென்றும், சிலவற்றை ஒதுக்கிப் பார்ப்பதும் இயல்பாகி விட்டது. ஆனால் அப்படி ஒதுக்க வேண்டியது - மனதில் எழுகின்ற ஒரு வித மயக்கம் என்றே எண்ண வேண்டி இருக்கிறது. எல்லா மாதங்களும் ஏதோ ஒரு விதத்தில் சிறப்புக்களைக் கொண்டுதான் வருகின்றன. மார்கழியைப் பீடை பிடித்த மாதம் என்கிறோம். புரட்டாசியையும் ஒரு பக்கம் தள்ளியே வைக்கிறோம். ஆடியை மங்கலம் அற்ற மாதம் என்கிறோம். பங்குனியை, சித்திரையை, தையை, ஆவணியைக் கொண்டாடி வரவேற்கிறோம். இப்படி நோக்குவது எங்களிடம் இயல்பாகி விட்ட நிலையில் மங்கலம் இல்லா மாதமாக எடுத்துக் கொள்ளும் ஆடி எங்களை நாடி வருகிறது! வருகின்ற ஆடியை விட்டு விட்டு விலகத்தான் எங்களால் முடியுமா? முடியவே முடியாது! நாடிவரும் ஆடி பற்றி பார்ப்போமா வாருங்கள்!

ஆடி என்றவுடன் - ஆடிச்செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிப்பூரம், ஆடிக்கார்த்திகை, ஆடித்தபசு, ஆடிப் பெருக்கு, ஆடி அமாவாசை, ஆடி பௌர்ணமி என்று இறை வழிபாட்டுடன் இணைந்ததாக ஆடி மாதம் முழுவதும் அமைந்திருப்பதை நாமனைவரும் மனமிருத்த வேண்டியது அவசியம். ஆடி மாதத்தை அம்மனின் மாதம் என்பதையும் அகமிருத்தல் மிகவும் அவசியமேயாகும். அப்படி இருக்க ஆடியை நாடாமல் ஒதுக்கிப் பார்ப்பது முறையா?

மார்கழியில் திருவெம்பாவை வருகிறது. ஆண்டாளின் திருப்பாவையும், மணிவாசகரின் திருவெம்பாவையும் மார்கழியில் கோவில்களில் பக்தி சிரத்தையுடன் பாடப்படுகின்றன. வைணவர்களும், சைவர்களும் கொண்டாடும் மாதமாய் மார்கழி இருக்கிறது. மாதங்களில் நான் மார்கழி என்று கீதையில் கண்ணனே சொல்லுவதையும் கருத்திருத்த வேண்டும். புரட்டாசியில் நவராத்திரி வருகிறது. கலைகளைப் போற்றும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சமயமும் கலைகளும் சங்கமிக்கும் மாதமாய் புரட்டாசி விளங்குகிறது. ஆடி, புரட்டாசி, மார்கழி இறைவழிபாட்டுக்குரிய மாதங்களாகும். அப்படி என்றால் மற்றைய மாதங்கள் இறை வழிபாட்டுக்கு ஏற்றன அல்லவா என்று வினா எழுகிறதல்லவா? ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்களில் மங்கலமான நிகழ்வுகளான - வீடு குடிபுகுதல், திருமணம், திருமண நிச்சயதார்த்தம், காது குத்தல் எதையும் செய்வதில்லை. காரணம் - இம்மாதங்கள் தேவர்களுக்கு உரிய மாதங்கள். மனிதர்களுக்கும் அவர்களின் இன்பங்களுக்கும் உரிய மாதங்கள் அல்ல என்பதுதான் காரணம்.

சூரியனை அடிப்படையாகக் கொண்ட மாதங்கள் தான் நம்முடைய தமிழ் மாதங்கள். கடக ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம்தான் ஆடி மாதம். ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரையான ஆறு மாதங்களும் சூரியன் - தன்னுடைய வடக்கு நோக்கிய பயணத்தை முடித்துக் கொண்டு தெற்கு நோக்கி பயணிக்கிறார். தெற்கு என்பது பித்ருக்களுக்கு உரிய திசையாகும். இதனால் இம்மாதத்தை பித்ருக்களுக்கு வழிபாடாற்றும் மாதமாயும் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மனிதர்களுக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். ஆடி தொடங்கி மார்கழி வரையான ஆறுமாதங்களும் சூரியனின் தெற்கு நோக்கிய பயணமாகும். தை தொடக்கம் ஆடிவரையான ஆறு மாதங்களும் சூரியனின் வடக்கு நோக்கிய பயணமாகும். வடக்கு நோக்கிய பயணக் காலத்தில் வெப்பம் அதிகமாய் இருக்கும். தெற்கு நோக்கி சூரியன் பயணிக்கும் பொழுது வெம்பம் தணிந்து - காற்று, மழை, பனி என்னும் கால நிலை வந்து நிற்கும். தெற்கு நோக்கிய சூரியனின் பயணக்காலம் தேவர்களுக்கு இராக்கால மாகும். அதாவது ஆடி என்பது தேவர்களின் இராக்கால தொடக்கமாகும். மார்கழி என்பது தேவர்களுக்கு விடியல் காலமாகக் கருதப்படுகிறது. ஆடி இரவின் தொடக்கம். மார்கழி விடியலின் தொடக்கம்.

ஆடியில் சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கிறார் என்று பார்த்தோம். கடகராசி என்பது சந்திரனின் ஆட்சி வீடாகும். சூரியன் சிவனின் அம்சமாகும். அந்தச் சூரியன் சக்தியின் அம்சமான சந்திரனில் சஞ்சாரம் செய்யும் நிலை இக்காலத்தில் அமைகிறது. இதனால் சந்திரனின் ஆளுமை அதிகரிக்கிறது. இப்படி ஆவதால் ஆடி மாதம் என்பது சக்தியின் மாதமாய் விளங்குகின்றது. அக் காரணத்தால்தான் அம்மனின் மாதம் - ஆடி என்று ஆகிவிட்டது. அம்மனுக்கு உகந்த விழாக்கள் இம்மாதத்தில் முக்கியத்துவம் பெறுவது இதனால்தானோ என்று எண்ணிட வைக்கிறது.

அறிவியல் வழியில் சிந்திப்பதும் உகந்ததாகும். ஆடி மாதம் காற்றுக் காலமாகும். காற்றினால் பரவும் நோய்கள் அதிகரிக்கும் காலமாகவும் இக்காலம் அமைகிறது. இதனால், வேப்பிலை, மஞ்சள் என்பவற்றை வழிபாடு என்ற வகையில் அம்மனுக்கு உரியதாக்கி நிற்பதும் நோக்கத்தக்கது. அத்துடன் கூழ் காய்ச்சுவதும், அம்மனுக்கு வைத்து வழிபடுவது கூட அறிவியலை ஆன்மீகத்துடன் இணைக்கும் நிலையினையே காட்டுகிறது.

ஆடி மாதத்தை கணக்கிட்டுத்தான் பண்டிகைகளின் தொடக்கமே அமைகிறது என்பதும் நோக்கத்தக்கது. கிராமங்கள் தோறும் அம்மனுக்குரிய விழாக்கள் நடைபெறுவதும் மனமிருத்த வேண்டியதே. அம்மனைப் பல நிலைகளில் வழிபடுவதும் நோக்கத்தக்கது. காவல் தெய்வமாய் கருதி போற்றி வழிபாடுகளில் ஈடுபடுவதையும் ஆடியில் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஆடியில் ஆறுகளில் நீர்ப்பெருக்கு வருவதை அனைவரும் கொண்டாடி மகிழ்கின்றார்கள். இதனையே ஆடிப்பெருக்கு என்று அகமகிழ அழைக்கின்றார்கள். சுமங்கலிப் பெண்கள் தங்களின் தாலிக்கயிற்றை மாற்றுவதும், அம்மனுக்கு படையில் வைத்து ஆராதிப்பதும் இவ்வேளை இடம் பெறுகிறது என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

பெண்கள் விரும்பி அனுட்டிக்கும் விரதமான வரலட்சுமி விரதம் ஆவணி மாதத்துக்குரியதாய் இருந்தாலும், பெரும்பாலன சமயங்களில் ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் வருகிறது. ஆடி வெள்ளியில் மாரியம்மனுக்கு தேர்த்திருவிழா, தெப்பத்திருவிழா, தீமிதிப்பு எல்லாம் நடக்கும். அருள் மாரியாய் கருமாரி விளங்கிறாள் அல்லவா? சின்னக் கோவில்கள், பெரிய கோவில்கள் எல்லாம் இந்த விழாக்கள் நடைபெறுவதும் நோக்கத்தக்கது.

ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசையும், தையில் வருகின்ற அமாவாசையும் , கடலில் நீராட உகந்த தினங்களாகும். தட்சணாயன புண்ணிய காலம், உத்தராயன புண்ணியகாலம் என்று இக்காலங்களைச் சிறப்பித்துச் சொல்லுவார்கள்.

இறைவனை அடைவதற்கு அன்னை பராசக்தி தவம் செய்ததும் ஆடி மாதத்தில்த்தான். சூடிக் கொடுத்த சுடர்கொடியான ஆண்டாள் நாச்சியார் ஆடியில்த்தான் அவதரிக்கின்றார். சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் அழைத்துக் கொண்டதும் ஆடியில்தான் என்பதும் அகமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

தையினை பொங்கல் திருநாளாய், அறுவடைத் திருநாளாய் கொண்டாடுவதற்கு வித்திடப்படுவதே ஆடியில்தான். ஆடிப்பட்டம் தேடி விதை என்னும் பழமொழியே ஆடியில் விதைத்தால்தான் தையில் அறுவடை



செய்ய முடியும் என்பதைக் காட்டி நிற்கிறதல்லவா?

ஆடிச் செவ்வாயினை மையமாய் கொண்டு ஆடிச் செவ்வாய் தேடிக்குளி - அரைச்ச மஞ்சளைப் பூசிக்குளி என்னும் முதுமொழியும் பழக்கத்தில் இருக்கிறது.

ஆடி தெய்வீக மாதம். அம்மனின் மாதம், என்றெல்லாம் போற்றப்பட்டாலும் புதுமணத் தம்பதிகளுக்கு மட்டும் வெறுப்பான மாதமாய் இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் ஏன் வெறுப்பாய் இருக்கிறது என்பதையும் அறிவதும் அவசியம் அல்லவா? மணமான தம்பதிகளைப் பிரித்து விடுவார்கள். அதாவது பெண்ணைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விடுவார்களாம். சாஸ்த்திரம் என்று சொன்னாலும் - இங்கே எங்களின் முன்னோர்களின் நல்ல சிந்தனையும் கலந்தே இருக்கிறது. ஆடியில் கரு வுற்றால் - பத்தாவது மாதமான சித்திரையில் பிரசவம் நடக்கும். சித்தியிரையில் புத்திரன் பிறந்தால் தந்தைக்கு நல்லதல்ல என்னும் கருத்து சாதரணமாக சமூகத்தில் நிலவுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. சித்திரையில் கத்தரி வெயில் என்பதை அனைவரும் அறிவோம். வெப்பம் கூடிய காலத்தில் பிரசவம் நடந்தால் காலநிலை காரணமாக பிரசவிக்கும் பெண் பெரும் வேதனைக்கு ஆளாவாள். பிரசவ வேதனையுடன் வெயிலின் கொடுமையும் பெருவேதனையைத் தந்துவிடும் என்பதால் மணப் பெண்ணை பிறந்த வீட்டுக்கு ஆடியில் அனுப்பிய எங்களின் முன்னோர்களின் சிந்தனையினைப் பாராட்டாமல் இருக்கத்தான் முடியுமா?

ஆடி என்றவுடன் ஆடிவேல் விழா அகத்தினில் அமர்ந்து விடும். எங்கள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரும் கட்டாயம் வந்து நிற்பார். தாத்தாவின் வரவையும், அவரின் ஆடிப்பிறப்பு ஆனந்தமான பாடலையும் நினைவுக்குக் கொண்டுவருவதும் நாடிவரும் ஆடி அல்லவா?

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்த மானந்தம் தோழர்களே!**
**கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**

**பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்**
**பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,**
**வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல**
**மாவைப் பதமாய் வறுத்தெடுத்து.**

**வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே**
**வேலூரில் சக்கரையுங்கலந்து.**
**தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி**
**சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.**

**வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி**
**வெல்லக் கலவையை உள்ளே இட்டு**
**பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே**
**பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!**

**பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி**
**போட்டு மாவுண்டை பயறுமிட்டு**
**மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்**
**மணக்க மணக்க வாயூறிடுமே**

**குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே**
**குத்து விளக்குக் கொளுத்தி வைத்து**
**அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை**
**ஆடிப் படைப்பும் படைப்போமே**

**வண்ணப் பலாவிலை ஒடிப்பொறுக்கியே**
**வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு**
**அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க**
**ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே**

**வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல**
**மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்**
**கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்**
**கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே**

நாடிவரும் ஆடி அமங்கலமான மாதம் அல்ல. அது தெய்வீக மாதம். கொழுக்கட்டையும் சாப்பிட்டு கூழும் குடித்து மகிழும் காலம். ஆடிப்பட்டம் விட்டு அம்மனை போற்றிக் கொண்டாடி, தோழர்களுடன் பாடி மகிழுவோம் வாருங்கள்!

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!




- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-65

### சந்திரிகாவின் அரசமைப்பு நகல்

போரை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர், சிங்கள மக்களின் இறைமையைத் தீவு முழுவதும் நிலைநாட்ட அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆம் திருத்தத்தை நீக்கி, 'ஒரு நாடு; ஒரே சட்டம்' என்ற உறுதி மொழிகளைக் கோட்டாவிடம் பெற்று, அவரை அரவணைத்து, பேரினவாதத்தின் புத்திஜீவிகளின் 'எளிய', 'வியத்மக' போன்ற அமைப்புகள் அவரது வெற்றிக்குப் பாடுபட்டன.



நீலன்

இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டி சிங்கள மக்கள் மட்டுமே தங்கள் வாக்குகளால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் தன்னைத் தேர்ந்தெடுத்தார்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவது தனது கடமை என்ற கோட்டாபயவின் திமிர்த்தனப் பேச்சுக்களை தமிழ் மக்கள் அவர் தற்போது பதவியில் இல்லை என்பதால் உதாசீனம் செய்ய முடியாது. அவை பேரினவாதத்தின் வார்த்தைகள். அதன் அடிப்படையிலான தேர்வுதான் இப்பொழுதும் முக்கியமாகக் கவனத்தில் உள்ளது.

இது விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் இல்லாத – ஸ்ரீலங்காவின் இறைமைக்கு சவாலாக இல்லாத – காலம்.

ஆனால், விடுதலைப் புலிகள் பலமாக இருந்த நாள்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமென்ற சமாதானப் புறாவாகத்தான் சந்திரிகா பண்டாரநாயக்கா தனது பிரச்சாரங்களை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட அறி வித்த போது தொடங்கினார். அந்தக் கொள்கை நிலைப்பாட்டில் அவரது பிரசாரங்களுக்குப் பக்கபலமாக பல முக்கிய மனித உரிமை அமைப்புகளும், சமூக ஆர்வலர்களும், நீதிக்கும் சமாதானத்துக்கும் பலகாலம் போராடிய மதச்சார்பு குழுக்களும், புத்திஜீவுகளும் இணைந்து செயல்பட்டார்கள்.

நண்பர்கந்தசாமியின்கூற்றுப்படிஅவர் இணைந்து பணியாற்றிய அமைப்பு வெளிக்கொணர்ந்த அரசமைப்பு நகல், இனப் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய கட்டமைப்பின் முன்னோடங்களைக் கொண்டிருப்பதாக சந்திரிகாவினாலும், அவரது அரசியல் சகாக்களாலும் பார்க்கப்பட்டது. அதனால் அவர் அதனைப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நீலன் திருச்செல்வம், பஸ்தியாம்பிள்ளை, லக்ஷமன் கதிர்காமர் போன்றவர்களுடன் கலந்தாலோசித்து, அவற்றில் எழுந்த இணக்கப்பாடுகளிலேயே சந்திரிகாவின் தீர்வுப் பொதி நகல் வரையப்பட்டு, அவரது புதிய அரசமைப்பின் நகல்யாப்பு உருவாக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் முன் பிரேரிக்கப்பட்டது.

நண்பர் கந்தசாமியின் தகவல்களின் படி கலாநிதி வில்சன், நீலன் திருச்செல்வத்திற்கு இவற்றின் ஆக்கங்களுக்கு ஆதரவுகொடுத்தாலும், இனப்பிரச்சினை முற்றிய நிலையிலும், பெரும்பான்மையின் திடசங்கற்பத்தைக் கணக்கெடுக்கும் போதும், புதிய அரசமைப்பு சமஷ்டி என்ற அடிப்படையில் ஆக்கப்பட்டாலும் "தமிழ்மக்களுக்குஅவர்களின்அன்றைய நிலையில் கூட அது ஒத்துவராத கட்டமைப்பாகத்தான் இருக்கும்" ("It is too little, too late") என்று அபிப்பிராயத்தை நீலனுக்கு தெரிவிக்காமல் இல்லை.

கலாநிதி வில்சன் அரசியல் சட்டங்களிலும் அரசமைப்புகளிலும் புலமை வாய்ந்தவர். தந்தை செல்வாவின் மருமகன். அவரது மகளைத் திருமணம் செய்தவர். தமிழ் மக்களின் அரசியல் பாதைகளில் தொடர்ந்து ஈடுபட்டு, புத்திமதிகள் தந்து வட்டுக்கோட்டை தீர்மானத்தை வடிவமைப்பதிலும் பெருமளவில் பங்காற்றியவர்.

ஆனாலும் ஒரு முதல் படியாக, பேரினவாதங்களின் இணக்கங்களாக இந்தத் தீர்வுகளைப் பெற்றுக் கொண்டு முன்னேற வேண்டும் என்ற அக்கறைகளையும் வெளிப்படுத்தி இருந்தார்.

துரதிஷ்டவசமாக நீலன் திருச்செல்வம் விடுதலைப் புலிகளால் 'துரோகி' என்ற முத்திரை குத்தப்பட்டு, அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முகவராக முன்னெடுக்கும் தீர்வுப் பொதி தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது அல்ல என்ற பிரச்சாரங்களும் வைக்கப்பட்டுப்பின்னர் அவரும் கொல்லப்பட்டார்.

### மஹிந்தவின் முன்னெடுப்புகள்

சந்திரிகாவின் தீர்வுப் பொதியை முறியடிப்பதில் விடுதலைப் புலிகள் மாத்திரம் அல்லர், சந்திரிகாவின் கட்சியின் பேரினவாதிகளான மஹிந்த போன்றோர், அவரது கூட்டமைப்பின் விமல் வீரவன்ஸ, சம்பிக்க போன்றோரும் எதிர்த்து, கடைசியில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கும் சாத்தியம் இல்லை என அது திரும்பப் பெறப்பட்டது. சந்திரிகாவின் தீர்வுப் பொதியை ஏற்கலாம் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியில் சம்பந்தன் உள்ளிட்ட ஒரு பகுதி அபிப்பிராயப்பட்டது. ஜோஸப் பரராஜசிங்கம் போன்ற விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் அதனை ஆதரிக்கவில்லை.

நண்பர் கந்தசாமியின் கோபங்கள் எல்லாம் கலாநிதி வில்சன் "It is too little, too late" என ஆதங்கம் தெரிவித்தாலும், அப்பொழுதே அவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கைவிடத் தயாராகி விட்டார்கள். அப்படி இருந்தும் பேரினவாதம் ஓர் இணக்கத்துக்கு வரத் தயாராகவிருக்கவில்லை. இவற்றை அனுபவரீதியாக உணர்ந்திருந்த சம்பந்தன், பின்னர் விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட கூட்டமைப்பின் தலைமைப் பதவியை ஏற்று, மஹிந்த போரை முடித்ததை இந்தியாவில் இருந்து பார்த்து இருந்து, 13 வருடங்களாக எதுவித இணக்கங்களும் காணாமல், கோட்டாபயவின் ஆட்சியில், புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை உள்ளடக்கலாம் என்று தமிழ் மக்களை நம்ப வைப்பதுதான் ஆத்திரத்தை தருகிறது என்பார். சம்பந்தனும் சுமந்திரனும் மக்களது காதில் பூ வைக்க முயலுகிறார்கள். அவர்கள் ஓர் அரசமைப்பை உருவாக்கிக் கொள்ள முடிந்தாலும், நாட்டில் தமிழர்களும் சிங்களவர்களும், சமத்துவமாக ஒரே உரிமைகளோடு, இன,மத, மொழி வேறுபாடுகள் இல்லாமல் நடத்தப்படுவார்கள் என்ற சாரப்பட்டதாகவே அது இருக்கும். நாட்டின் மக்கள் யாவரும் சமத்துவமானவர்கள் என்று இப்பொழுது இருக்கும் அரசமைப்பும் கூறுகிறது. ஆகவே ஆக்கப்பட்ட மற்ற சட்டங்கள், அவற்றை அமுல்படுத்தும் கட்டமைப்புகள், நீதிமன்றங்கள் இவற்றை நடைமுறைப்படுத்தும் விதங்களில்தான் பாரபட்சங்கள் இருக்கும். ஆதலால் இவை மனோபாவங்களின் மாற்றங்களில், இரு இனத்தவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் அளவளாவிப் புரிந்து கொண்ட அடிப்படைகளில் இணக்கங்களாக இடம் பெற வேண்டும்.

இவை எல்லாவற்றையும் தவிர்த்து, பேரினவாதம் அதிகாரப்பரவலை அடியோடு நீக்கி விடுவதற்காக புதிய அரசமைப்பை தேட – அதில் மக்கள் யாவரும் சமத்துவமாக அவர்களின் மனித உரிமைகள் மதிக்கப்படும் விதங்களில் நீதி பரிபாலனமும் இருக்கும் என்று சேர்த்து விடுவதால் – அது இனப் பிரச்சினைக்கான தீர்வாகிவிடும் என்பது முட்டாள்தனமாகும். தமிழர்கள் வேண்டியது – இன்றும் வேண்டுவது – நாட்டின் எப்பகுதியிலும் சமத்துவம் மட்டும் என்பதல்ல, அதையும் தாண்டி, தாங்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில், தங்களது மொழியில் பேசி, பாடி, குலாவி, மதக்கோட்பாடுகளை அனுசரித்து, தங்களது கலாச்சார வாழ்க்கை முறைகளை பின்பற்றி, தங்கள் பரிபாலனங்களை தாங்களே முன்னெடுப்பதுதான். அரசமைப்புக்கான அமைப்பை முன்னெடுப்பவர்கள் – அவை பற்றி பேசுகிறவர்கள் – அதில் உள்ள தனித்துவத்தையும், அதுதான் பெரும்பான்மையுடன் இருந்த முட்டி மோதல்கள், பின்னரான யுத்தம் என்பதையும், அதனை அடக்கி ஒடுக்குவதுதான் பேரினவாதத்தின் வரலாறு என்பதையும், புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பேரினவாத போக்கை எப்படி, எந்த அணுகுமுறைகளில் எதிர்கொண்டு தங்களது தனித்துவத்தை நிலை நிறுத்திக் கொள்வது என்பதுதான் தமிழ் மக்களால் கவனிக்கப்பட வேண்டியது.

தங்களது நாடாளுமன்றப் பதவிகளில் இருந்து பேசுவது இனத்திற்கான பிரதிநிதித்துவமாக இருக்க வேண்டுமே ஒழிய, தங்களது கெட்டித்தனங்களுக்காக வரலாற்றைப் புதைத்ததாக இருக்கக் கூடாது என்பது நண்பர் கந்தசாமியின்



கந்தசாமி

அங்கலாய்ப்பும் கோபமும் மட்டுமல்ல, தமிழ் மக்களிடையே பரந்த அளவில் உருவாக்கி வரும் கருத்தியலும் கூட என்பது தென்படுகிறது,

### காலிமுகத் திடலில் எழுந்த தார்மீகங்களும் அதன் விளைவுகளும்

ஓர் இன வெறி அரசியலால் இதுவரை நாட்டு மக்கள் பிரிக்கப்பட்டு, அதில்



பேராசிரியர் ஏ.ஜே.வில்ஸன்

அரசியல் லாபமும் கண்டு, நாட்டையும் இதுவரை அதிகாரத்திலிருந்து நடத்திய அரசியல்வாதிகள், பின்னர் கேட்பாரற்று நாட்டைச் சூறையாடினார்கள் என்பது காலிமுகத் திடலில் பேசப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டவைக்கு அனுதாபங்களும் விமர்சனங்களும் தரப்பட்டன. இவற்றுக்குக் காரணமான கோட்டா – மஹிந்தா இருவருமே பதவி விலகினார்கள். கோட்டா பதவியில் இருந்து துரத்தப்பட்டார். தமிழ் மக்களை ஒட்டி அதன் விளைவுகள் என்ன?

அவர்கள் சாதி, மத, பேதம் இன்றி சமத்துவமாக நாடு முழுவதும் நடத்தப்பட வேண்டும், எல்லோரும் ஒரு நாட்டு மக்களாக வாழ வேண்டும் என்பதே காலிமுகத்திடல் போராளிகளின் நிலைப்பாடு. இங்கு (தமிழரின்) தனித்துவம் என்பதை காலிமுகத் திடலில் போராடிய எந்தக் குழுவும் பேசுவதில்லை. அது நாட்டு மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டியது என அத்தலைவர்கள் கைவிரிக்கிறார்கள். தற்பொழுது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையின் உறுப்பினர்கள் சிங்கள மக்களின் நலன்களை முன்னிறுத்தி வெற்றி பெற்றவர்கள். பெரும்பான்மை கட்சிக்காரர்கள் இடையே ஜதிகளில் சில வித்தியாசங்கள் இருந்தாலும் ஆட்டம் ஒன்றுதான்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பு ஒன்று இந்த நாடாளுமன்றக் காலத்தில் உருவாவது முயல் கொம்பே.

போராட்டக் குழுக்களின் சோசலிஸ்ட் கட்சியின் தலைவர் பிரேரிப்பதின் பிரகாரம் புதிய தேர்தலில் உருவாக்கப்படக் கூடிய மக்கள் ஆயங்களால் (People's Council) அவை கிராம, பிரதேச, மாகாண, தேசிய அளவில் தீர்மானிக்கப்படலாம் என்கிறார். புதிய தேர்தலில் உருவாகக் கூடிய பெரும்பான்மை மக்களின் அரசு இதுவரை இருந்தவற்றையெல்லாம் – அதிகாரப் பரவலாக்கலை நீக்கிடவே பாடுபட்டபோது, தனித்துவமான அதிகாரப் பரவலை ஏற்றுக்கொள்ள இணங்குவார்கள் என்பது சந்தேகமானது.

இங்குதான் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் 'தமிழ் மக்கள் தங்களுக்கு தற்சமயம் இருப்பதை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்' என்று கூறிய ஆலோசனையில் கவனம் செலுத்த முன்னெடுப்புகள் தேவை.

(வளரும்)